இலக்கு
GLOBAL TAMIL MEDIA CENTER
வாராந்த மின்னிதழ்
ilakku.org
SUBSCRIBE US! youtube.com/c/IlakkuWeb
LIKE US! facebook.com/ilakku.ilakku.10
FOLLOW US! twitter.com/Ilakku1

இதழ் 301 | சனி, ஆகஸ்ட் 24, 2024 | 16 பக்கங்கள்


# மூன்று முனைப் போட்டியில் முன்னணியில் இருப்பது யார்?



பல்கலைக்கழக பேராசிரியர் –
கோபாலபிள்ளை அமிர்தலிங்கம்



# பண்பாட்டு விழுமியங்களை அழிப்பதன் மூலம் தமிழர்களின் இருப்பினை அழிக்க சதி

மட்டு.நகரான்



# கட்டாக கொல்லப்பட்டார்களா மேற்குலகத்தின் முக்கிய பிரமுகர்கள்?

ஆர்த்திகன்


© 2024 இலக்கு இணையம்

## தமிழ்ப் பொது வேட்பாளர் அரியநேத்திரனின் “நமக்காக நாம்” தேர்தல் பிரச்சாரப் பயணம் ஆரம்பம்




தமிழ்ப் பொது வேட்பாளர் அரியநேத்திரனின் “நமக்காக நாம்” தேர்தல் பிரச்சாரப் பயணம் யாழ்ப்பாணம் சக்கோட்டை கொடி முனையில் இருந்து ஆரம்பமாகியுள்ளது.

இந்தப் பயணம் பொலிகண்டி கிழக்கு, பொலிகண்டி மேற்கு, வல்வெட்டித்துறை, ஆதி கோவிலடி, தொண்டைமானாறு, வளலாய், பலாலி, தையிட்டி, காங்கேசன்துறை ஆகிய இடங்களுக்குப் பயணித்து தமிழர் தாயகத்தின் எட்டு மாவட்டங்களுக்கும் பயணம் செய்ய உள்ளது.

தொடர்ந்து நடைபெற விருக்கும் இந்த பிரச்சாரப் பயணத்தின் மேலதிக விபரங்கள் அறியத்தரப்படும் எனவும், வடக்கு, கிழக்கு தவிர்ந்த ஏனைய பகுதிகளுக்கும் மக்களின் அழைப்பின் பெயரிலான பிரச்சாரப் பணிகளும் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## ஆபிரிக்க நாடுகள் மீது உக்ரைன் தாக்குதல் – ஐ.நாவில் முறைப்பாடு

ஆபிரிக்க நாடான மாலியில் உள்ள தீவிரவாதிகளுடன் இணைந்து மாலி நாட்டு படையினரையும், அவர்களின் பயிற்சியாளர்களான ரஸ்ய படையினரையும் உக்ரைன் படையினர் கொலை செய்ததற்கு எதிராக ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஆபிரிக்காவின் சாகேல் பிராந்திய நாடுகளின் கூட்டணியில் உள்ள மாலி, நெஜெர் மற்றும் பேர்கினோ பசோ ஆகிய நாடுகள் கூட்டாக கோரிக்கை விடுத்துள்ளன.

கடந்த ஜூலை மாதம் இடம்பெற்ற இந்த தாக்குதலில் சில டசின் மாலி படையினரும், ரஸ்யா



வின் பயிற்சியாளர்களும் கொல்லப்பட்டிருந்தனர். இந்த தாக்குதலில் தீவிரவாதிகளுக்குஉக்ரைன்படையினர் உதவிகளையும் ஆயுதங்களையும் வழங்கியதற்கான ஆதாரங்கள் தம்மிடம் உள்ளதாக இந்த 3 நாடுகளின் வெளிவிவகார

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

## சுமந்திரன், சாணக்கியன் ஆகியோருக்கு மக்கள் பாடம் புகட்டுவர்

சுமந்திரன், சாணக்கியன், சிவஞானம் போன்ற சிலர் தனிப்பட்ட காரணங்களுக்காகவே பொது வேட்பாளரை எதிர்ப்பதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் பொதுவேட்பாளருக்கு ஆதரவாக பிரசாரத்தை ஆரம்பித்து வைத்து ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த அவர்,

“தமிழ்ப் பொது வேட்பாளருக்கு தமிழரசுக்கட்சியில் மிகப் பெரும்பாலானவர்கள் ஆதரவாக இருக்கின்றார்கள்.

சுமந்திரன், சாணக்கியன்,



சிவஞானம் போன்ற ஒரு சிலரைத் தவிர கட்சியின் ஏனைய மேல் மட்டங்களும் சரி, ஏனைய கட்சியின் கீழ் மட்ட தொண்டர்களும் சரி பொது வேட்பாளர் வெற்றி பெற வேண்டும் என்பதில் உறுதியாக

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

## மேற்குலக நாடுகள் மூன்றாவது உலகப்போரை தூண்டுகின்றன–இத்தாலி



ரஸ்யாவுக்குள் தாக்குதல் நடத்த தேவையான ஆயுதங்களை மேற்குலக நாடுகள் தொடர்ந்து உக்ரைனுக்கு வழங்குவதன் மூலமும் ரஸ்யாவுக்குள் உக்ரைன் மேற்கொண்டுள்ள தாக்குதல்களை ஊக்கப்படுத்துவதன் மூலமும் மேற்குலக நாடுகள் மூன்றாவது உலகப்போரை தூண்டுவதாக இத்தாலியின் துணை பிரதமர் மற்றியோ சல்வினி கடந்த புதன்கிழமை(21) தெரிவித்துள்ளார்.

அண்மையில் உக்ரைன் மேற்கொண்டுக்க ரஸ்யாவின் கேர்க்ஸ் பகுதி மீதான தாக்குதல்களில் அது மேற்குலகத்தின் ஆயுதங்களை பயன்படுத்தி வருவதாக ரஸ்யா தெரிவித்துள்ளது. அதனை மேற்குலக ஊடகங்கள் பலவும் உறுதிப்படுத்தி வருகின்றன.

ரஸ்யாவுக்குள் தமது

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

## திருகோணமலை மாவட்டத்தில் பாழடைந்து காணப்படும் வீட்டுத்திட்டங்கள்

திருகோணமலை மாவட்டத்தில் கடந்த நல்லாட்சி அரசாங்கத்தில் அமைக்கப்பட்ட பல வீட்டுத் திட்டங்கள் இடைநடுவில் கைவிடப்பட்டு பாழடைந்தும் முடிவில்லா பிரச்சினைகளாக காணப்படுவதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.



குறித்த வீட்டுத் திட்டங்களானது திருகோணமலை மாவட்டத்தில் உள்ள பல பகுதிகளிலும் அமைக்கப்பட்டது. இதில் அத்திவாரமிடப்பட்ட பல வீடுகளும், இடை நடுவில் கைவிடப்பட்ட நிலையிலும் காணப்படுகிறது. ரணில் விக்ரமசிங்க பிரதமராகவும் ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேனவும் இருந்த நல்லாட்சி அரசாங்கத்தின் போது அப்போதைய வீடமைப்பு அமைச்சராக இருந்த சஜீத் பிரேமதாச அவர்களால் குறித்த வீடமைப்பு திட்டங்கள் அமைக்கப்பட்டன. இருந்தும் ஆட்சிமாற்றம் காரணமாக கோத்தபாய ராஜபக்ச அரசாங்கம் பொறுப்பேற்றதன் பின் அனைத்து அபிவிருத்தி வேலைகளும் கைவிடப்பட்ட நிலையில் பாழடைந்து காணப்படுகிறது .

இதனால் வீட்டுத் திட்டங்களை நம்பிய மக்கள் ஏமாற்றமடைந்துள்ளதாக தெரிவிக்கின்றனர். குறித்த திட்டங்களை வீடமைப்பு அமைச்சின் கீழ் உள்ள தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினர் முன்னெடுத்திருந்தனர்.



தற்போதைய எதிர்க் கட்சி தலைவராக இலங்கை நாடாளுமன்றத்தில் செயற்படும் சஜீத் பிரேமதாச ஜனாதிபதி தேர்த லில் போட்டியிடுகிறார். எதிர்காலத்தில் ஜனாதிபதியானால் கைவிடப்பட்ட வீட்டு திட்டங்கள் அனைத்தும் முழுமையாக பூரணப்படுத்தப்படுமா என மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்

## ஹசீனாவை நாடுகடத்தும்படி இந்தியாவுக்கு கோரிக்கை

அண்மையில் பங்களாதேசத்தில் இடம்பெற்ற மாணவர்களின் புரட்சியை தொடர்ந்து நாட்டைவிட்டு தப்பியோடி இந்தியாவில் அடைக்கலம் பெற்றுள்ள பங்களாதேசத்தின் முன்னாள் பிரதமர் சேக் ஹசினாவை நாடுகடத்தும் படி பிரதான எதிர்க்கட்சியான பங்களாதேச தேசியவாதக் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

பங்களாதேசத்தின் அவாமி லீக் கட்சி அரசு பதவியில் இருந்து அகற்றப்பட்ட பின்னர் மேற்குலகம்



சார்ந்த மொஹமட் யூனுஸ் அங்கு அமைக்கப்பட்டுள்ள இடைக்கால அரசுக்கு தலைவராக

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

## இந்திய கடற்படைக்கு புதிய 4 ரஸ்ய போர்க்கப்பல்கள்



ரஸ்ய கடற்படையின் பிரதான கட்டளைஅதிகாரியான அலக்ஸ்சாண்டர் மொய்சீவ் இந்தியாவுக்கு பயணம் மேற்கொண்டு இந்திய கடற்படைத்தளபதி உட்பட பல உயர் அதிகாரிகளை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இந்திய பிரதமர் நரேந்திர மோடி ரஸ்யாவுக்கு பயணம் மேற்கொண்டு ரஸ்ய அதிபர் விளமீடீர் பூட்டினை சந்தித்த சில வாரங்களில் இந்த பயணம் அமைந்துள்ளது.

இரு நாட்டு கடற்படையினரும் இந்துசமுத்திரப் பிராந்தியத்தில் தமது ஆளுமையை அதிகரிக்கும்

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

## இனவாதிகளுக்கு வாக்களிப்பது வடக்கு கிழக்கு எமது தாயகம் என்பதை மறுதலிப்பதாகும்...

### அருட்தந்தை மா.சக்திவேல்



'இனவாத ஆட்சியாளர்கள் தமிழ் மக்களுக்கு எந்தவொரு உரிமையையும் வழங்குவதற்கு தயாராக இல்லை. அவர்களுக்கு வாக்களித்து நாம் தொடர்ச்சியாக ஏமாந்திருக்கின்றோம் அல்லது ஏமாற்றப் பட்டிருக்கின்றோம். நாம் யுத்தத்தினால் பல இழப்புக்களை சந்தித்தபோதும் எமது அரசியலை இன்னும் இழக்காதிருக்கின்றோம்.

எமது அரசியல் இருப்பினை தொடர்ந்தும் தக்கவைத்துக் கொள்ள வேண்டியது மிகவும் அவசியமாகும்' என்று அருட்தந்தை மா.சக்திவேல் தெரிவித்தார்.

எதிர்வரும் செப்டம்பர் மாதம் 21 ம் திகதி இடம்பெறவுள்ள ஜனாதிபதி தேர்தல் குறித்து கருத்து வினவியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அருட்தந்தை மேலும் குறிப்பிடுகையில், இலங்கையில் முப்பதாண்டு காலம் பிரதம மந்திரியை தலைவராகக் கொண்ட ஆட்சி நிலவியது. அதன் பின்னர் இப்போது 44 ஆண்டுகளாக நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி நிலவுகின்றது. இந்த இரண்டு ஆட்சியிலும் தமிழ் மக்களுக்கு எவ்விதமான நீதியும் கிட்டவில்லை. இனப்படுகொலை, இன அழிப்பு விடயங்களைத் தான் நாம் மீண்டும் மீண்டும் ஞாபகத்தில் கொள்ள வேண்டியுள்ளது. இனவாதத்தை கையில் எடுத்துக் கொண்ட சிலர் தேர்தலில் களமிறங்கியுள்ளனர்.

இது ஒரு சாபக்கேடாகும். இத்தகையோருக்கு வாக்களிப்பதென்பது நமக்கு நாமே குழி பறித்துக் கொள்கின்ற ஒரு செயற்பாட்டினைப் போன்றதாகும். 1987 ம் ஆண்டு இந்திய இலங்கை உடன்படிக்கையைத் தொடர்ந்து மாகாண சபைகள் உருவாக்கப்பட்டன. எனினும் மாகாணசபைக்குரிய அதிகாரங்களையே முழுமையாக தர மறுக்கின்ற ஒரு நிலைமையே இலங்கையில் காணப்படுகின்றது.

பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்கள் இன்னும் கேள்விக்குறியாகவே இருந்து வருகின்றன. இதுகாலவரை 13 பிளஸ், 13 மைனர்ஸ் என்று பேசிக்கொண்டே இருக்கின்றார்களே தவிர எந்த அதிகாரத்தையும் கொடுப்பதற்கு ஆட்சியாளர்கள் தயாராக இல்லை என்பது யாவரும் அறிந்ததேயாகும்.

மக்கள் கோபத்தின் வெளிப்பாடாக கடந்த 2010 ம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் சரத் பொன்சேகாவுக்கு வாக்களித்தார்கள். இதுவும் நமக்கு நாமே மண்ணையள்ளிப் போட்டுக் கொண்டதைப் போன்ற ஒரு செயற்பாடேயாகும். இதேவேளை 2018ம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் மக்கள் மைத்திரிபால சிறிசேனவுக்கு வாக்களித்தார்கள். எனினும் மைத்திரியும் யுத்தம் குறித்து பல்வேறு கருத்துக்களை வெளிப்படுத்தி இருக்கின்றார். இப்பபடியானவர்களுக்குத்தான் மக்கள் வாக்குகளை வழங்கி இருக்கின்றார்கள்.

இனவாத அரசியல்வாதிகளுக்கு தொடர்ந்தும் வாக்களித்து நாம் ஏமாந்திருக்கின்றோம் அல்லது ஏமாற்றப் பட்டிருக்கின்றோம்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியோ, பிரதமரோ அல்லது வேறு எந்த சிரேஷ்ட அரசியல்வாதிகளோ தமிழ் மக்களுக்கான உரிமைகளை ஒருபோதும் வழங்கப்போவதில்லை. தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றப் போவதில்லை என்பதே உண்மையாகும்.

தான் ஆட்சிக்கு வந்தால் 13 ஐ அமுல்படுத்துவேன் என்று ரணில் சொல்கிறார். மஹிந்த ராஜபக்ச 13 இல் சில விடயங்களை நாங்கள் வழங்கப்போவதில்லை என்று குறிப்பிடுகின்றார். அனுரகுமார திசாநாயக்கவும்

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

## பொருளாதார யுத்தப் பிரகடனத்திலிருந்து ஈழத்தமிழர் தாயக இறைமையைக் காக்க பொதுவேட்பாளர்க்கு வாக்களிக்குக

சிறிலங்காவின் வங்குரோத்துப் பொருளாதார நிலையிலிருந்து மீண்டெழுவதற்கு அனைத்துலக நாணய நிதியத்தின் பிணையெடுப்பு நிபந்தனைகளை அடுத்த ஐந்து வருடத்துக்குத் தொடர்ந்து செயற்படுத்துவதற்கான சிங்கள மக்களாணையைப் பெறும் சிறிலங்காவின் 9வது அரசுத்தலைவரைத் தெரிவு செய்யும் தேர்தலைச் சிறிலங்காவின் அரசுத்தலைவர் ரணில் விக்கிரமசிங்கா இன்னும் சரியாக ஒருமாதத்தில் செப்டெம்பர் 21இல் நடாத்தவுள்ளார். அதே நேரத்தில் ஒரு கல்லில் இருமாங்காயாக ஈழத்தமிழர் தாயகத்தின் மீதான பொருளாதார யுத்தப் பிரகடனத்தை ஈழத்தமிழர்களின் தாயகத்தின் நில- கடல் - வான் பகுதிகளை இந்தியக் கூட்டாண்மையின் கீழும் மற்றைய நாடுகளின் பங்காண்மையின் கீழும் பொருளாதார வளர்ச்சி என்ற பெயரில் கொண்டு வரும் செயற்பாட்டினை யாழ்ப்பாணத்தில் வைத்தே அறிவித்த சிறிலங்காவின் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கா ஈழத்தமிழர்களின் வாக்கினாலேயே அப்பிரகடனத்தை அங்கீகரிக்கச் செய்யும் நரித்தந்திர அரசியலையும் செய்ய முற்பட்டுள்ளார்.

இந்நிலையில் ஈழத்தமிழர்கள் தேசமாக எழுந்து இந்த அரசுத்தலைவர் தேர்தலையும் அதன் நோக்குகளையும் நாம் அனுமதிக்கமாட்டோமெனத் தங்களின் தாயகத்தின் மீதான பொருளாதார யுத்தத்தைத் தடுத்து நிறுத்துவதற்கான சனநாயகப் போராட்டத்தைத் தமக்கான "பொதுவேட்பாளர்" ஒருவரைத் தேர்தலில் நிறுத்தித் தொடங்கியுள்ளனர். எனவே இப்பொழுது ஈழத்தமிழர் தாயகம் "அவசர நிலைக்கு" உள்ளாகியுள்ளது. இந்நேரத்தில் ஈழத்தமிழர்கள் தங்களுக்கு இடையில் உள்ள கருத்து வேறுபாடுகளைக் கடந்து ஆறு இலட்சத்துக்கு மேற்பட்ட வாக்குகளைப் பொதுவேட்பாளருக்குப் பதிவு செய்வதன் மூலம் தாயகம் மீதான சிறிலங்காவின் பொருளாதாரயுத்தத்தைத் தடுத்து நிறுத்துவதற்கான ஈழத்தமிழர்களின் மக்கள்பலத்தை உறுதிப்படுத்த வேண்டும் என்பதே இலக்கின் உடனடியானதும் முக்கியமானதுமான வேண்டுகோளாக உள்ளது.

அடுத்து ஈழத்தமிழர்களின் தேசிய விடுதலைப் போராட்ட வரலாற்றில் 90களை அடுத்து ஈழத்தமிழர்கள் தங்களின் போராட்ட முறைமையை "டிஜிட்டல் போராக" மாற்றியமையே சிறிலங்காவின் மிக மோசமான இனஅழிப்பு இனத்துடைப்பு பண்பாட்டு இனஅழிப்புகளுக்கு மத்தியிலும் முப்பதொரு ஆண்டுகள் தங்களுடைய உயிரையும் உடமைகளையும் நாளாந்த வாழ்வையும் பாதுகாத்து அமைதியான வளர்ச்சிகளுடன் கூடிய நடைமுறையரசை நிலைப்படுத்த உதவியது என்பது வரலாறு. ஆயினும் இந்த "டிஜிட்டல் தரவு" பரிமாற்றத்தினைச் சிறிலங்கா அரசாங்கமும் அதன் ஆதரவு பிராந்திய மற்றும் உலக வல்லாண்மைகளும் ஒருங்கிணைந்து பல்வேறு உத்திகளால் தடுத்து நிறுத்தியே 2009ம் ஆண்டு முள்ளிவாய்க்கால் ஈழத்தமிழின அழிப்பு என்னும் 21ம் நூற்றாண்டின் கிட்லரிசத்தையும் மிஞ்சிய ராசபக்சத்தினால் 176000 ஈழத்தமிழர்களைத் தேசமாகவே இனப்படுகொலை செய்தனர். அத்துடன் பல்வேறு இன்றைய இஸ்ரேலிய மனித வதைகளை விட மோசமான மனித வதைகளால் ஈழத்தமிழர்க்கு இனங்காணக் கூடிய அச்சத்தையே வாழ்வாக்கி அவர்களின் அரசியல் பணிவைக் கடந்த 15 ஆண்டுகளாகப் படைபலம் கொண்டு பெற்று அதனை சனநாயக ஆட்சியாக உலகில் தமது ஆதரவு நாடுகளைக் கொண்டு நிலைநிறுத்தி வருகின்றனர்.

இந்நிலையில் இரண்டு விடயங்கள் முக்கியம் பெறுகின்றன. ஒன்று மீளவும் சமகாலத்தில் உள்ளக தன்னாட்சி உரிமை மறுக்கப்பட்ட நிலையில் திறந்த சிறையில் வாழும் ஈழத்தமிழ் மக்களின் வாழ்வியலின்உண்மைகளை உலகின் பார்வைக்கு கொண்டு வருதல். மற்றையது, வரலாற்று உண்மைகளின் அடிப்படையில் ஈழத்தமிழர்களின் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதலாக இன்று வரை இலங்கைத் தீவில் தொன்மையும் தொடர்ச்சியுமான இறைமையுடன் வாழ்ந்து வரும் ஈழத்தமிழர்கள் உடைய தாயக தேசிய தன்னாட்சி உரிமைகளின் தன்மைகளையும் தேவைகளையும் உலகுக்கு வெளிப்படுத்தல். இவ்விரண்டுக்கும் மீளவும் "டிஜிட்டல் போரை" அனைத்துலக சட்டங்களுக்கு அமைவாக உண்மையுடனும் நேர்மையுடனும் திரிபுவாதங்கள் பொய்மைகளின்றியும் முன்னெடுப்பதற்கு இந்த பொதுவேட்பாளர் தேர்தல் மேடையைப் பயன்படுத்த வேண்டும். வரலாறு, மானிடவியல் தொல்லியல் சமுகவியல் அரசியல் விஞ்ஞான பொருளாதார சட்ட, அளைத்துலகச் சட்ட, அனைத்துலகக் கற்கைகள் ராஜதந்திரக் கற்கைகள் ஆசிரியர்கள் மாணவர்கள் மற்றும் எழுத்தாளர்கள் ஊடகவியலாளர்கள் ஆய்வாளர்கள் சிந்தனையாளர்கள் அனைவரும் ஒருங்கிணைந்து சமுகக் கொள்கைகளையும் ஈழத்தமிழர்களின் அரசியல் பொருளாதாரக் கொள்கைகளையும் சுருக்கமாகத் தெளிவாக வெளிப்படுத்த உழைக்க வேண்டிய நேரமிது என்பதை இலக்கு வலியுறுத்திக் கூற விரும்புகிறது.

வாக்கு என்பது சனநாயகத்தையும் விடுதலையையும் உறுதிப்படுத்தும் மிக எளிமையான ஆனால் மிக்கசத்தி படைத்த ஆயுதம். ஆயினும் பெரும்பான்மையினர் ஆட்சி நடைபெறும் கட்டமைப்புக்களில் அவ்வாக்கு மக்களின் பிரதிநிதித்துவமாக சட்டவாக்க நிர்வாக சட்ட அமுலாக்க வலுவேறுபாட்டுடன் சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற சட்ட ஆட்சியாக அமைவதில்லை. இதனால் வாக்கு என்பது அனைத்துலக மக்களுக்கும் அனைத்துலக நாடுகளுக்கும் அனைத்துலக அமைப்புக்களுக்கும் பாதிப்புற்ற மக்கள் தங்களின் வெளியக தன்னாட்சி உரிமையின் அடிப்படையில் தங்களுக்கான பாதுகாப்பான அமைதியையும் வளர்ச்சிகளையும் உறுதி செய்யுங்கள் என்பதை மக்களாணையாக வெளிப்படுத்தத்தான் உதவும். 1977 இலேயே ஈழத்தமிழர்களின் அரசியல் கொள்கையாகக் கோட்பாடாகத் தங்களுடைய அரசியல் எதிர்காலத்தைத் தாங்களே முடிவுசெய்யும் தங்களின் பிரிக்கப்பட முடியாத தன்னாட்சி உரிமையின் அடிப்படையில் தனியாட்சியே தங்களுக்குப் பாதுகாப்பான வாழ்வையும் வளர்ச்சிகளையும் தருமென ஈழத்தமிழர்கள் தன்னாட்சியை வெளிப்படுத்தி 1978 முதல் நடைமுறையரசாக நிறுவி 31 ஆண்டுகள் அதில் பாதுகாப்பான அமைதியான வளர்ச்சிகளுடன் வாழ முற்பட்ட போது ஒவ்வொரு முறையும் சிறிலங்கா ஆயுதப்படை மூலமும் அரசபயங்கரவாதத்தின் மூலமும் அதனைத் தடுத்து வந்தனர் என்பது வரலாறு.

இந்நிலையில் பிரித்தானியக் காலனித்துவத்தால் உருவாக்கப்பட்டுத் தீர்க்கப்படாத காலனித்துவப் பிரச்சினையாகவுள்ள தங்களின் இறைமையை மீளுறுதி செய்தல் என்ற ஈழத்தமிழர் தேசியப் பிரச்சினையின் ஆள்நிலைக் குறியீடாகவே பொதுவேட்பாளர் இன்று கட்டமைக்கப்பட்டுள்ளார். ஆயினும் சிறிலங்காவின் அரசியலமைப்பின் 6ம் திருத்தம் பயங்கரவாதத் தடைச்சட்டம் என்பன ஈழத்தமிழர்களின் கருத்துச்சுதந்திரம் பேச்சுச் சுதந்திரம் எழுத்துச் சுநத்திரம் ஒன்று கூடும் சுதந்திரம் உட்பட்ட அடிப்படை மனித உரிமைகளை மறுத்துள்ளதால் தப்பி வாழும் பொறிமுறைக்குள்ளே உங்களின் சுயநிர்ணய உரிமைக்கு நீங்களே வாக்களிப்பது இப்பொதுவேட்பாளர் என்ற உறுதியான செய்தி மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் இப்பொதுவேட்பாளர் ஈழத்தமிழரின் தன்னாட்சி உரிமைக்கான குறியீடாக உள்ளதால் இதில் வெற்றி தோல்வி என்ற பேச்சுக்கே இடமில்லை. நாம் ஈழத்தமிழர்கள் தேசமாக எழுவதையே விரும்புகின்றோம் என்பதையே எவ்வளவு வாக்கு கிடைத்தாலும் அவ்வளவு வாக்கும் உலகுக்குச் சொல்லும் என்பதே உண்மை. அது ஆறு இலட்சத்துக்கு அதிகமானால் அதுவே பெரும்பலமாகும் என்பதை உணர்ந்து வாக்குப்பலத்தால் ஈழத்தமிழர் தாயகத்தின் மீதான ரணிலின் பொருளாதார யுத்தப் பிரகடனத்தைத் தடுத்து நிறுத்த நாம் ஒன்றுபட்டெழ வேண்டும் என்பதே இலக்கின் இவ்வார எண்ணமாகவுள்ளது.

**ஆசிரியர்**

# தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு சுயாதீனமாக செயற்படுகிறதா?

அகிலன்

ஜனாதிபதித் தேர்தலுக்கான தினம் நெருங்கிக் கொண்டிருக்கும் நிலையில், அதிகாரத்தைப் பயன்படுத்திச் செய்யப்படும் முறைகேடுகள் குறித்த முறைப்பாடுகள் அதிகரித்துவருகின்றன. குறிப்பாக வேட்பாளர்களில் ஒருவராக ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி என்ற முறையில் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி தேர்தல் சட்டத்தை மீறி செயற்படுவதாக எதிர்க்கட்சிகளும், தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்களும் தேர்தல் ஆணைக் குழுவுக்கு பல முறைப்பாடுகளைச் செய்துள்ளன.




இவைதொடர்பில் தேர்தல் ஆணைக்குழு மௌனமாக இருப்பதற்கு காரணம் என்ன? சுயாதீன தேர்தல் ஆணைக்குழு என்று சொன்னாலும் அது உண்மையில் சுயாதீனமாக இயங்குகின்றதா? இந்தக் கேள்விதான் அனைவரிடமும் எழுகின்றது.

தேர்தல் ஆணைக்குழு சுயாதீனமாக செயற்படுகின்றதா என்ற கேள்வியுடன், அதற்கு போதிய அதிகாரங்கள் இருக்கின்றதா என்ற கேள்வியும் மேலதிகமாக எழுகின்றது.

தேர்தல் ஒன்று அறிவிக்கப்பட்டால் தேர்தல் நடைமுறைகள் பல உள்ளன. குறிப்பாக, தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் வாக்களிப்பு நடைபெறும் தினம் வரையில் "காபந்து அரசாங்கம்" என்ற நடைமுறைதான் பெரும்பாலான நாடுகளிலும் பின்பற்றப்படும். இந்தக் காலத்தில் தேர்தல் ஆணைக்குழுதான் அதிகாரம் மிக்கதாக இருக்கும்.

புதிய நியமனங்கள், தேர்தல் செயற்பாடுகளுக்காக அரசாங்கத்தின் வளங்களைப் பயன்படுத்துவது என்பன முற்றாகத் தடை செய்யப்பட்டிருக்கும். இது போன்ற விடயங்களில் தலையிடக்கூடிய அதிகாரம் மிக்கதாக தேர்தல் ஆணைக்குழு இருக்கும். இந்தியாவில் இது போன்ற நடைமுறைகள் கடுமையாகப் பின்பற்றப்படுகின்றன.

இலங்கையைப் பொறுத்தவரையில் அந்த நிலை இல்லை. கடந்த காலங்களில் ஒரு சில சந்தர்ப்பங்களில் தேர்தல் ஆணைக்குழு உறுதியான சில நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தது. ஆனால், இப்போது தேர்தல் ஆணைக்குழு பலவீனமாக இருக்கின்றதா என்ற கேள்வி எழுகின்றது.

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டமை தொடர்பாக உயர் நீதிமன்றம் கடந்த வியாழக்கிழமை வழங்கியுள்ள தீர்ப்புகூட, தேர்தல் ஆணைக்குழு சுயாதீனமாக இயங்கவில்லை என்பதைத்தான் உறுதிப்படுத்தி யிருக்கின்றது.

கடந்த வருடம் மார்ச் மாதத்தில் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்கள் நடைபெற்றிருக்க வேண்டும். அதற்கான நியமனப் பத்திரங்களும் கோரப்பட்டு கட்டுப்பணமும் செலுத்தப்பட்டிருந்தது. ஆனால், தேர்தலை நடத்துவதற்குத் தேவையான நிதி திறைசேரியால் வழங்கப்படவில்லை. நிதி அமைச்சராகவும் இருந்த ரணில் விக்கிரமசிங்க அதனைத் தடுத்தார். தேர்தல் ஆணைக்குழு அப்போது அவரது செயற்பாட்டுக்குத் துணை போனது.

பொருளாதார நிலையைக் காரணம் காட்டி மக்களின் ஜனநாயக உரிமை மறுக்கப்பட்டது. இந்த சம்பவத்தின் பின்னணியில் இருந்த அரசியல் என்ன என்பது வாசகர்களுக்குத் தெரியும்.

தேர்தல் ஆணைக்குழு முற்று முழுதாக சுயாதீனமானதாகவும் பலமானதாகவும் இருந்திருந்தால் அந்த நிலை ஏற்பட்டிருக்காது. அரசியல் ரீதியான ஒரு காரணத்துக்காக பொருளாதார நெருக்கடி சாட்டாகக் கூறப்பட்டமைக்கு நிதி அமைச்சராகவும் இருக்கும் ஜனாதிபதியும் தேர்தல் ஆணைக் குழுவும்தான் பொறுப்பு என்று உயர் நீதி மன்றம் வழங்கிய தீர்ப்பில் தெளிவாகக் கூறப்பட்டிருக்கின்றது.

உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்தாமல் முடக்கியதன் மூலம் நிதி அமைச்சர் என்ற முறையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களால் வாக்காளர்களின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளன என்று உயர்நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது. பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, நீதியரசர்கள் விஜித் மலலகொட, முர்து பெர்னாண்டோ, காமினி அமரசேகர, யஸந்த கோத்தாகொட ஆகிய ஐவர் அடங்கிய ஆயம் இந்தத் தீர்ப்பை ஏகமனதாக வழங்கியது.

தேர்தலை முடக்குவதற்கு ஜனாதிபதி மேற்கொண்ட உபாயங்களை முறியடிப்பதற்கான வல்லமை தேர்தல் ஆணைக்குழுவுக்கு இருக்கவில்லை என்பதையும் அந்தச் சம்பவம் தெளிவாகக்காட்டுகின்றது.



ஒத்திவைக்கப்பட்ட உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஏனைய தேர்தல்களின் அட்டவணைகளைப் பாதிக்காத வகையில், உடனடியாக நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. 2023 ஆம் ஆண்டு உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் ஒத்திவைக் கப்பட்டதால் வாக்காளர்களின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளன என்றும் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை ஒத்திவைக்கச் செய்வதற்காக ஜனாதிபதி எவ்வாறான உபாயங்களைக் கையாண்டு தேர்தல் ஆணைக்குழுவுக்கு அழுத்தம் கொடுத்தார் என்பதும் இரகசியமானதல்ல. அதனை முறியடிக்கக்கூடிய அதிகாரத்துடன் அல்லது சுயாதீனத் தன்மையுடன் தேர்தல் ஆணைக்குழு இருக்கவில்லை என்பதை இந்த உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு தெளிவாகப் புலப்படுத்துகின்றது.

இப்போது ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைப்பதற்கும் தன்னாலான அத்தனை முயற்சிகளையும் ஜனாதிபதி மேற்கொண்டார் என்பதும் இரகசியமானதல்ல. தேர்தலில் தன்னால் வெற்றிபெற முடியுமா என்ற சந்தேகம் அவருக்கு இருந்தமையால்தான் அரசியலமைப்பில் இருக்கக் கூடிய அத்தனை ஓட்டைகளையும் நுணுக்கமாக ஆராய்ந்து தேர்தலை ஒத்திவைக்க முடியுமா என்பதை அவர் ஆராய்ந்தார்.

இலங்கையின் தேர்தல் சட்டத்தைப் பார்த்தால் ஜனாதிபதித் தேர்தலும், பொதுத் தேர்தலும் குறிப்பிட்ட காலப்பகுதியில் எப்படியும் நடத்தப்பட்டேயாக வேண்டும். உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களையும், மாகாண சபைகளுக்கான தேர்தலையும் தொடர்ச்சியாகத் தள்ளிப் போடுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளன.

ஜனாதிபதித் தேர்தல் எப்படியும் செப்ரெம்பர் 21 ஆம் திகதி நடத்தப்பட வேண்டும் என்று தேர்தல் ஆணைக்குழு அறிவித்து நியமனப் பத்திரங்களும் தாக்கல் செய்யப்பட்டுவிட்ட நிலையில், அதனை எதிர்கொண்டுதான் ஆக வேண்டும் என்ற நிலை இப்போது ரணில் விக்கிரமசிங்கவுக்கு.

இதனை எதிர்கொள்வதற்காக பல உபாயங்களை அவர் வகுத்து வைத்துள்ளார். நிதி அமைச்சராகவும் ரணில் இருப்பதால் பல விடயங்களைக் கையாள்வது அவருக்கு இலகுவாக இருக்கின்றது.

குறிப்பாக பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் மூலமான நிதி ஒதுக்கீடு. நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தன்வசப்படுத்துவதற்கான ஒரு கருவியாக இதனை அவர் பயன்படுத்துகின்றார். ரிஷாட் பதியுதீனுக்கு ஏற்கனவே ஒதுக்கப்பட்ட 30 கோடி ரூபா இப்போது நிறுத்தப்பட்டுவிட்டது. சஜித் பிரேமதாசவை ஆதரிப்பது என்ற ரிஷாட்டின் முடிவையடுத்தே இந்த அதிரடி நடவடிக்கை.

அதேபோல, ரிஷாட் தலைமையிலான கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரும் கட்சியின் கட்டுப்பாட்டை மீறி ரணிலை ஆதரிக்க முடிவெடுத்தமையால் அவருக்கு பல கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இதனையும் ஜனாதிபதிதான் செய்திருக்கின்றார். நிதி அமைச்சராகவும் அவர் இருப்பதால் திறைசேரிக்கு இது குறித்த உத்தரவுகளை அவர் நேரடியாகவே வழங்க முடியும்.

இந்த நிதிகள் ஜனாதிபதித் தேர்தலுக்காகவே செலவிடப்படுவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இந்த வார முற்பகுதியில் நாடாளுமன்றத்தில் தெரிவித்திருந்தார். இது தொடர்பில் தேர்தல் ஆணைக்குழுவில் முறையிடப்போவதாகவும் அவர் கூறியிருக்கின்றார்.

இது ஒருபுறமிருக்க ரணிலை ஆதரிப்பதாக அறிவித்த இரண்டு எதிரணி உறுப்பினர்களான வடிவேல் சுரேஷ், அலி சாஹிர் மௌலானா ஆகியோர் இராஜாங்க அமைச்சர்களாக நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள்.



நீதிமன்றத் தீர்ப்பின் மூலம் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகளை இழந்த ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து தெரிவான இருவர் கடந்த மாதம் அமைச்சுக்களின் செயலாளர்களாக நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.

தேர்தல் நெருங்கும் நிலையில் இந்த நியமனங்கள் தேர்தலை இலக்காகக் கொண்டவை. தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி ஜனாதிபதி

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# பண்பாட்டு விழுமியங்களை அழிப்பதன் மூலம்

# தமிழர்களின் இருப்பினை அழிக்க சதி

மட்டு.நகரான்

கிழக்கு மாகாணத்தின் இன அடையாளம் என்பதுதமிழர்களின்வடகிழக்குதமிழர்களின் தாயக கோட்பாட்டில் மிக முக்கியமாக கருதப்படுகின்றது.அதிலும் தமிழர்களின் தாயகத்தில் காணப்படும் தமிழர்களின் பண்பாட்டு விழுமியங்களைஅழிப்பதன்மூலம்தமிழர்களின்இருப்பினை கேள்விக்குட்படுத்தும் முயற்சிகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படுகின்றன.

கிழக்கில் தமிழர்களின் முக்கிய இருப்புகளை இல்லாமல்செய்து சிங்கள பௌத்த தேசியவாதத்தினை நிறுவுவதற்கு பல்வேறு முயற்சிகள் பல்வேறு காலப்பகுதிகளில் முன்னெடுக்கப்பட்டுவருகின்றது.இதன்கீழ் கிழக்கில் குறிப்பாக திருகோணமலை மாவட்டத்தில் தமிழர்களின் வரலாற்றினை அழித்து சிங்கள பௌத்த தேசியவாதத்தினை நிறுவுவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன.



அவற்றில் பல்வேறு செயற்பாடுகள் கடந்த காலத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ளன. கன்னியா வெந்நீரூற்றினை முற்றாக சிங்கள மயப்படுத்தியுள்ள சிங்கள பேரினவாதம் இன்று திருகோணேச்சரம் ஆலயத்தினையும் சிங்கள மயப்படுத்தும் செயற் பாட்டினை முன்னெடுத்துவருகின்றது. தமிழர்களின் இதயத்தினையே பிடுங்கி எடுக்கும் செயற்பாடுகளை சிங்கள அரசு முன்னெடுத்து வருகின்றது.

குறிப்பாக திருகோணமலை மாவட்டம் என்பது தமிழர்களின் வரலாற்றுப்பொக்கிஸங்கள் நிறைந்த மாவட்டம் என்பதுடன் ஆதி காலம் தொடக்கம் சிவ வழிபாடுகள் நிறைந்த தமிழர்கள் வாழ்ந்த மிக முக்கியமான பகுதியாக காணப்படுகின்றது.அக்காலத்தில் இலங்கை வராமலே சமய குருவர்களினால் பாடல் பாடப்பெற்ற தலமான கோணேஸ்வரத்தினை கொண்ட இடமாகவும் காணப்படுகின்றது.



தமிழர்களின் பண்பாட்டு தொன்மையும் வரலாறுகளும் இந்த நாட்டில் பௌத்தம் வருகைக்கு முன்னரே திருகோணமலையில் தமிழர்கள் மிகப்பலமாக காலுன்றியிருந்தார்கள்.அதன் காரணமாகவே இந்த நாடு சுதந்திரம் அடைந்த காலம் தொடக்கம் திருகோணமலை இலக்கு வைக்கப்பட்டு பௌத்த பேரினவாதிகளினால் தொடர்ச்சியான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.



இதன் ஒரு கட்டமாகவே அண்மைக்காலமாக திருகோணமலை தொடர்பில் பல்வேறு செயற்பாடுகளை திட்டமிட்டு முன்னெடுத்துவருகின்றது. குறிப்பாக கோணேஸ்வரர் ஆலயத் தில் கோபுரம் அமைப்பதற்கு பௌத்த இன வாதிகள் தொடர்ச்சியான எதிர்ப்பினை வெளியிட்டுவந்ததுடன் ஆலய சூழலில் கடைகளை அத்துமீறிய வகையில் அமைத்து ஆலயத்தினை சூழ அடாவடியில் ஈடுபட்டுவருகின்றனர்.இதற்கு முழுமையான ஒத்துழைப்பினை அங்குள்ள படையினரும் பொலிஸாரும் வழங்கிவருகின்றனர்.

இந்த நிலையில் அண்மைக்காலமாக கிழக்கு மாகாண ஆளுனருக்கும் கோணேஸ்வரர் ஆலய நிர்வாகத்தினருக்கும் இடையே பெரும் இழுபறி நிலைமையினை உணரமுடிகின்றது. ஆலயத்திலிருந்த சோழர் காலத்து நகையொன்று திருடப்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண ஆளுனரின் ஊடக குழுமத்தின் ஊடாக செய்திகள் பரப்பபட்ட நிலையில் அவ்வாறான நகையெதுவும் ஆலயத்திலிருந்து களவாடப்படவில்லையென ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.



இவ்வாறானநிலையில்ஆலயநிர்வாகத்தில் தனக்கு போசகர் பதவி வழங்கப்படவேண்டும் என்ற தொடர்ச்சியான அச்சுறுத்தல்களும் அழுத்தங்களும் கிழக்கு மாகாண ஆளுனரினால் விடுக்கப்பட்டுள்ள நிலையிலேயே இந்த நகை விவகாரமும் வெளியிடப்பட்டுள்ளது.சாதாரண மூன்று பவுண் பெறுமதியான ஆலயத்திற்கு ஒருவர் நன்கொடையாக வழங்கிய நகையொன்றே களவுபோயுள்ள நிலையில் சோழர் காலத்து நகையொன்று களவுபோயுள்ளதாக கிழக்கு மாகாண ஆளுனரின் ஊடக பிரிவினால் தகவல் பரப்பபட்டுள்ளது.

இதன் பின்னர் ஆலய நிர்வாகத்தினருக்கு எதிராக ஆளுனரினால் திட்டமிட்ட ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன் கூட்டங்களும் கூட்டப்பட்ட நிலையில் பொதுமக்களின் எதிர்ப்பினால் கூட்டத்திலிருந்து ஆளுனரும் வெளியேற்றப்பட்ட நிலைமையும் ஏற்பட்டது.

இவ்வாறான நிலையில் கோணேஸ்வரர் ஆலயத்தின் நுழைவதற்கு கிழக்கு மாகாண ஆளுனர் ஏன் இவ்வளவு அடாவடியில் ஈடுபடுகின்றார் என்பதே இன்று அனைவருக்கும் உள்ள சந்தேகமாகவுள்ளது.ஏற்கனவே இந்தியா கோணேஸ்வரத்தை புனரமைப்பதற்கு உதவவுள்ளதாக கூறியுள்ள நிலையில் அதற்குள் தமது முத்திரையைப்பறிப்பதற்கு முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றதா என்ற சந்தேகம் உள்ளது.



குறிப்பாக கோணேஸ்வர ஆலய சூழலை பௌத்தமயப்படுத்தியதன் பின்னர் புனரமைப்பு பணிகளை முன்னெடுக்கலாம் என்று சிங்கள தேசியம் சிந்திக்கின்றதா என்பதுபோன்ற நிகழ்வுகள் இன்று நடைபெற்றுவருகின்றன.

இன்று கிழக்கு மாகாண ஆளுனர் தொடர்பில் சமூக வலைத்தளங்களில் கடுமையான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுவருகின்றன. குறிப்பாக “தேர்தலில் தோல்வியுற்று பின்னர் அரசியல் டீலின் மூலம் கிழக்குமாகான ஆளுநராக பதவியேற்ற செந்தில் தொண்டமான் திருகோணமலையின் உள்ளக விடயங்களில் தொடர்ந்து தன் அதிகாரத்தைப் பயன்படுத்தி தலையிட்டு வருகின்றார்.இதன் தொடர்ச்சியாக கோணேசர் ஆலயத்தின் நிர்வாகத்தின் பொறுப்பை தனக்கும் தன் சகாக்களுக்கும் எடுக்கும் முயற்சியை மேற்கொள்வதாக பலர் குற்றம் சாட்டுகின்றார்கள். செந்தில் தொண்டமான் மற்றும்

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

# சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் நாள்:

# ‘இலக்குகளை தவறவிடாமல் காலம் கனிந்து வரும் வரையில் தொடர்ந்து செயற்பட வேண்டும்....”

**இலங்கையில் தமிழர் தாயகப்பகுதிகளில் போர் நடைபெற்ற கடந்த 30 ஆண்டு காலப்பகுதி மற்றும் இறுதி போர் என்று அழைக்கப்படுகின்ற 2009ம் ஆண்டு வரையில் இலங்கை அரச படைகளால் கைது செய்யப்பட்டு, அல்லது இராணுவத்தினரிடம் சரணடைந்தவர்கள்,ஒப்படைக்கப்பட்டவர்கள் என பெருமளவானோர் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். அவர்களின் உறவினர்கள் கடந்த 10 வருடங்களுக்கு மேலாக தமது உறவுகளைத் தேடி தொடர் போராட்டங்களை நடத்தி வருகின்றனர். இந்த நிலையில், சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் நாள், ஆகஸ்ட் 30-ஆம் திகதி நினைவு கூரப்படுகின்றது. இது தொடர்பில் இலக்கு ஊடகம் நடத்திய செவ்வியில் சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் நாளில் சர்வதேசத்திடம் நீதி கோரப்பட்டுள்ளது.**



மூத்த சட்டத்தரணி
**எஸ்.இரத்தினவேல்**

**கேள்வி:**

**காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான தீர்வை காண்பதில் இலங்கையும் மேற்குலகம் சார்ந்த ஐ.நாவும்இழுத்தடிப்புக்கள் மேற்கொண்டு வருகையில் தமிழ் மக்கள் எந்த நகர்வை மேற்கொள்வது பொருத்தமானது?**

**பதில்:**

‘வலிந்து காணாமல் ஆக்கப்படுதல் என்பது சர்வதேச சட்டத்தின் கீழ் ஒரு பாரதூரமான குற்றமாகும். அந்தக்குற்றத்தைஇழைத்தவர்கள் ஒரு குறிப்பிட்ட சமூகத்தை அவர்கள் இலக்கு வைத்து அதை செய்திருக்கிறார்கள் என்றுநிரூபிக்கப்பட்டால் அது ஒரு இனச்சுத்திகரிப்பு (genocide) என்ற குற்றத்துக்குள் அடங்கும்.

எனவே இந்த காணாமல் ஆக்கப்பட்டவர்கள் என்ற அந்த விடயம், மிக ஒரு பொருள் செறிந்து. அதை சரியானமுறையில் நாங்கள் பயன்படுத்த வேண்டும்.

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பாக பல வருடங்களாக விவாதங்கள் போராட்டங்கள் நடந்து கொண்டுஇருக்கின்றன. அவர்களைப்பற்றிய வழக்குகள் உள்ளூரில் நடந்து கொண்டு இருக்கின்றன. இலங்கைக்குவெளியேயும் அது தொடர்பான தகவல்கள் மற்றும் போரின் போது நடைபெற்ற சித்திரவதைகள், இரசாயனக்குண்டுத்தாக்குதல்கள், கொலைகள், கொத்துக்குண்டுகள் பயன்படுத்தியமை, நிலக்கண்ணிவெடிகள் வைப்பு இவைஅனைத்தும் போர்க் குற்றங்கள் என்பவற்றில் அடங்கும். எனவே பாரிய குற்றங்களை செய்த இலங்கை அரசாங்கம்தொடர்பில், உள்ளூரிலும், வெளிநாடுகளிலும்நடவடிக்கைஎடுக்க அது சம்பந்தமான சாட்சியங்கள், ஆதாரங்கள்என்பவை பாதுகாப்பான முறையில் சேகரிக்கப்பட்டு வருகின்றன. இது உத்தியோகப்பூர்வமாக ஐ.நாவினால் அமைக்கப்பட்ட ஒரு குழுமம் அதை செய்து கொண்டிருக்கின்றது.

இந்த நிலையில், தமிழ்சமூதாயத்தைப்பற்றி ஒரு குற்றச்சாட்டு இருந்தது அதாவது, போதுமான சாட்சியங்களை கொண்டுவரவில்லை என்று. அது உண்மைதான் ஏனென்றால் ஒரு காலத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்கள், கைது நடவடிக்கைகள் இருந்தாலும் இது பற்றி சரியாக ஐக்கிய நாடுகளால் ஸ்தாபிக்கப்பட்ட நிலையங்களுக்கு அதுசென்று சேரவில்லை. ஆனால் தற்போது உள்ளூர் ஸ்தாபனங்கள் மூலம் காணாமல் ஆக்கப்பட்டமை குறித்து ஓரளவு சரியான தகவல்கள், ஆதாரங்கள் அவர்களால் எடுக்கப்பட்டுள்ளது. அதோடு மக்களும் தாமாகவே பாதுகாப்பாக வெளிநாடுகளுக்குச் சென்று தம்மிடம் உள்ள ஆதாரங்கள் மற்றும் சாட்சிகளை வழங்கி வருகின்றனர்.



இந்த நிலையிலும் எதற்காக எமக்கான தீர்வு நீடித்துக்கொண்டு செல்கின்றது என்பது குறித்து பார்த்தால், Geopolitics என்ற புவிசார் விடயங்கள்,தமிழ் மக்களுடைய பிரச்சனைகள் மேல் தாக்கம் செலுத்திக் கொண்டுள்ளது. அதாவது மேற்கத்தைய நாடுகள், இந்தியா, சீனா உள்ளிட்ட அயல் நாடுகள் அனைத்தும் நேரடியாக அக்கறை கொண்டுள்ளன. இப்போது பார்த்தால் உண்மையில் விடுதலை இயக்கத்தை ஒரு பயங்கரவாத இயக்கம் என்று தடை கொண்டு வந்தது, போரில் அவர்களை தோற்கடிப்பதற்கு வழிகளை ஏற்படுத்தியது போன்ற பல பாரதூரமான விடயங்களை மேற்கத்தியநாடுகள் செய்து வந்தன. ஒரு போர்க்குற்றத்தை இலங்கை அரசாங்கம் செய்திருக்கென்று நிரூபிக்கப்பட்டாலும் கூட, நான் முன்னதாக குறிப்பிட்ட புவிசார் அரசியல் இதில் அதிகம் தாக்கம் செலுத்தும். கடந்த 2010ம் ஆண்டு முதல்ஜெனிவாவில் இருந்து ஒவ்வொரு தீர்மானமும் வந்துகொண்டிருக்கின்றது. அந்த தீர்மானத்தின் முதல் வரைவு நன்றாகஇருந்தது. ஆனால் அந்த தீர்மானத்தின் இறுதி வரைபில் உள்ளவிடயங்கள் நீர்த்துப்போகும் படியாகத்தான் தற்போதுஅந்த தீர்மானம் வருகின்றது. அதற்கு காரணம் இந்த புவிசார் அரசியலின் தாக்கம் தான். இதனால் தமிழ் மக்களுடையபிரச்சனைகள் ஒரு சரியான முறையில் கையாளப்படவில்லை. தற்செயலாக ஒரு காரசாரமான ஒரு விடயத்தை கொண்டு வந்தால் கூட, அதற்கான பேரம் பேசும் நிகழ்வுகள் திரைக்குப்பின்னால் நடக்கும். இது இலங்கைஅரசுக்குஒரு வாய்ப்பு. தங்களுடைய நாடு எக்கேடுகெட்டாலும் பரவாயில்லை. ஆனால் இந்த போர்க்குற்றங்களில் இருந்துஅரசாங்கத்தையும், தமது இராணுவத்தையும் பாதுகாப்பதற்கு அவர்கள் எந்த விதமான விட்டுக்கொடுப்பையும் செய்யத்தயாராக உள்ளனர்.

இவ்வாறான ஒரு சூழ் நிலையில்தான் தமிழ் மக்களுடைய பிரச்சனைகள் கையாளப்பட்டுக்கொண்டு வருகின்றது. இதைநாம் முன்னதாக பார்த்தோமேயானால், 1983ம் ஆண்டு இனப்படுகொலை நடந்த போது இந்தியா அதில் கூடுதலானகவனம் செலுத்தியது. அப்போது பிரதமராக இருந்த இந்திரா காந்தி மிகக்கடுமையாக இலங்கை அரசாங்கத்தைக்கையாண்டார், ஆனால் அதன்பின்பு வந்த இந்திய அரசாங்கமும் தலைவர்களும் வெவ்வேறு நிலைப்பாட்டை எடுத்தபடியால், தமிழ் மக்களுடைய பிரச்சனைகள் இன்னமும் தீர்க்கப்படாமல் நீடித்த நெருப்பாகவே இருக்கின்றது.

எனவே அரசியல் நிலைமைகள், அரசியல் தலைமைகள் மாறும் போது இதுவும் மாறும். ஆகவே தமிழ்மக்களுடையபிரச்சனைகளில் சரியான ஒரு நகர்வை முன்னெடுத்துக்கொண்டு இருந்தால்தான் காலம் கனிந்து வரும்போது தமிழ்மக்களுடைய பிரச்சனைகளுக்கு நியாயமான ஓர் தீர்ப்பு வரும். இந்த நம்பிக்கையில்தான் தமிழ்மக்கள்அரசியல்,ராஜதந்திர விடயங்களில் ஓர் இலக்கை நோக்கி சென்று கொண்டிருக்க வேண்டும்.

அந்த இலக்குகளை தவறவிடாமல் காலம் கனிந்து வரும் போது எங்களுடைய இந்த நகர்வுகள் நிச்சயம் ஒருபலனைத்தரும் என்றுதான் வேலைத்திட்டங்களை முன்னெடுத்துக்கொண்டு இருக்கின்றோம்’ என்றார்.

• • •




முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்கத் தலைவி
**மரிய சுரேஷ் ஈஸ்வரி**

**கேள்வி:**

**காணாமல் ஆக்கப்பட்டவர்கள் நினைவு நாளில் என்ன கூற விரும்புகின்றீர்கள்?**

தொடர்ச்சி 07ஆம் பக்கம்

**சர்வதேச வலிந்து ... தொடர்ச்சி ...**

**பதில்:**

*‘எங்களுடைய உறவுகளை இராணுவத்திடம் ஒப்படைத்து தற்போது சாட்சியங்களாக இருக்கின்ற எம்முடையகோரிக்கை என்னவென்றால் உள்ளக விசாரணை வேண்டாம் சர்வதேச விசாரணைதான் வேண்டும் என்பதுதான்.*

*ஆனால் எம்மீது உள் நாட்டு பொறிமுறைக்குள்தான் நீங்கள் தீர்வைக்காணவேண்டும் என அழுத்தம் கொடுக்கப்பட்டுவருகின்றது. நாம் அதை ஏற்கப்போவதில்லை. OMP அலுவலகம் தகவல்களை எடுத்துக்கொண்டு இருக்கின்றது. அவர்கள் கிராமசேவையாளர்கள் மூலம் விடும் அச்சுறுத்தல் காரணமாக காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களும் வேறு வழியின்றி அவர்கள் அலுவலகத்தில் பதிவு களை செய்கின்றனர். இந்த செயற்பாடு எங்களுக்கு பெரும் இழப்பு. மேலும் பல நிறுவனங்கள் உள் நாட்டில்தான் நீதி கிடைக்க வேண்டும் எனக்கூறுகின்றனர். ஆனால் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களாகிய நாம் சர்வதேசத்தையே நம்பியுள்ளோம் அவர்களே எமக்கானநீதியைப் பெற்றுத்தர வேண்டும்.*

*இலங்கையில்உள்ளஅனைத்துதூதரகங்கள் மற்றும் ஐ.நாவிலும் எமது கோரிக்கையை முன் வைத்துள்ளோம். எனவேஎமக்கான நீதியை சர்வதேசம் பெற்றுத்தரும் என்ற நம்பிக்கை இருக்கின்றது’ என்றார்.*

• • •




முன்னாள் மாகாணசபை உறுப்பினர்
**துரைராஜா ரவிகரன்**

**கேள்வி:**

**கொக்குளாய் புதைகுழியில் மீட்கப்பட்ட சான்றுகள் கானாமல் ஆக்கப்பட்டவர்களுடையாதா?**

**பதில்:**

*‘கடந்த 1984ம் ஆண்டு, டிசம்பர் மாதம் கொக்குத்தொடுவாய்ப் பகுதியில் இருந்த தமிழ் மக்களைவிடுதலைப்புலிகளுடனானதாக்குதலைக் காரணமாகக் கூறி இராணுவம் வெளியேற்றியது. அதன் பின் 2011ம் ஆண்டில்தான்மீண்டும் மக்கள் அப்பகுதியில் குடியேற்றப்பட்டனர். அது வரையில் குறித்த பகுதியில் இராணுவம் தான் நிலை கொண்டிருந்தது.*

*இதன் காரணமாக கொக்குளாய், கொக்குத் தொடுவாய், கருநாட்டுக்கேணி உள்ளிட்ட ஆறு கிராம அலுவலர்பிரிவுகளிலும் மக்கள் செல்ல தடை ஏற்படுத்தப்பட்டிருந்தது. எனவே 27 ஆண்டுகளாக குறித்த பகுதிகள்இராணுவத்தினரின் முழுக் கட்டுபாட்டில் இருந்தது என்பது அனைவருக்கும் தெரியும்.*

*இந்த நிலையில்தான் 2009ம் ஆண்டு இனவழிப்பு போரின் இறுதியில் மக்கள் முழுமையாக இராணுவ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டனர். அப்போது இராணுவத்தினரிடம் விடுதலைப்புலி உறுப்பினர்கள் சரணடைந்தனர். அவ்வாறுசரணடந்தபோராளிகள், குடும்பத்தினரால், இராணுவத்தின் அறிவுறுத்தலின் பேரில் அவர்களிடம் கையளிக்கப்பட்ட போராளிகள் என அனைவரையும் இராணுவம் தமது பாவனையில் வைத்திருந்த பேருந்துகளில் கொண்டு சென்றனர். ஆனால் அவர்கள் பின் தமது குடும்பத்தினரிடம் வரவில்லை. அத்தோடு தடுப்பு முகாம்களில் வைக்கப்பட்டிருந்த தமது உறவினர்கள், அதேபோல் மக்களை தடுத்து வைத்திருந்த முகாம்களில் இருந்து கைது செய்யப்பட்ட தமது உறவுகள் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர் என உறவுகளை இழந்த குடும்பத்தினர் கூறுகின்றனர். அதே நேரம் போர் நடந்துகொண்டிருந்த போது கடல் வழியாக வெளியேறிய போது இராணுவத்தினரினால் கைது செய்யப்பட்டவர்கள் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர் என்றும் ஒவ்வொரு முறை போராட்டங்களை நடத்துகின்ற போது காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் கதறி அழுவதை காணமுடிகின்றது.*



*இந்த சூழலில்தான் கொக்குதொடுவாய் புதைகுழியும் கண்டுபிடிக்கப்பட்டது, இதனால் இவ்வாறு காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளைத்தான் கொன்று இராணுவம் புதைத்திருக்கும் என்று காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தற்போது சந்தேகம் அடைந்துள்ளனர். ஏனெனில் 2009ம் ஆண்டு சரணடைந்த தமது உறவினர்களைபேருந்துகளில் ஏற்றி கொக்குத்தொடுவாய் பக்கம்தான் கொண்டு சென்றிருக்க வேண்டும் என்ற சந்தேகம் மக்களிடம்உள்ளது. மேலும் கைகள் கட்டப்பட்ட நிலையில் எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இவர்கள் உயிருடன்புதைக்கப்பட்டிருக்கலாம் என்றும் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது. அத்தோடு புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டுள்ளஇடத்திற்கு அருகில் வீடு கட்டுவதற்கு முற்பட்டபோதும் கூட சில மனித எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டதாகமக்கள் தெரிவிக்கின்றனர்.*

*இந்த சம்பவங்களோடு கொக்குத்தொடுவாய் புதைகுழி தொடர்பாக வழக்கும் பதிவு செய்யப்பட்டுள்ளது. குறித்த வழக்குநடைபெற்றுக்கொண்டு இருக்கின்றது.*

*இந்த புதை குழி அருகில் பொது மக்களை செல்ல அனுமதிக்கப்படவில்லை. ஊடகவியலாளர்களைக்கூட அகழ்வுநடைபெறும் போது அனுமதிக்கவில்லை. இந்த நிலையில், இது முதல் கட்ட ஆய்வென்றும் 2ம் கட்டமாக பகுப்பாய்வு செய்யப்போவதாகவும், அதில் தான் உண்மைகள் வெளிப்படும் என்றும் இராணுவத்தரப்பு தகவல் களைவெளியிட்டுள்ளன. மேலும் தொல்லியல் துறையினர் மற்றும் சட்ட வைத்திய அதிகாரி உள்ளிட்டவர்களின் தகவலில்,இங்கு மீட்கப்பட்ட எலும்புக்கூடுகள் உள்ளிட்டப் பொருட்கள் 2ம் கட்டமாக யாழ் பல்கலைக்கழகத்திற்கு கொண்டு செல்லப்பட்டு ஆய்வுகள் செய்யப்படும் என்று கூறப்பட்டுள்ளது.*

*இந்த புதைகுழி தொடர்பாக ஆரம்பத்தில் நீதி மன்றில் நடைபெற்ற கலந்துரையாடலில், பலராலும் வைக்கப்பட்டகோரிக்கை, சர்வதேச பொறிமுறையோடு சர்வதேசத்தினுடைய கண்காணிப்பே வேண்டும். யாழ் பல்கலைக் கழக தொல்லியல் பீடதுறையினை சேர்ந்த மாணவர்களோ, பேராசிரியர்களோ இந்த கண்காணிப்பில் பார்வையிடுதலில்இருக்க வேண்டும். இருந்தும் இவை நடைமுறைப்படுத்தப்பட்டதாக இல்லை. இரண்டு , மூன்று நாட்கள் பரமுபுஷ்பரட்ணம் ஐயா அவர்கள் வந்திருந்தார். ஆனால் அவரும் பின்னர் வரவில்லை.*

*இறுதிவரையில் சர்வதேசம் சார்ந்த யாரும் இந்தபுதைகுழிஅகழ்வில்கலந்துகொள்ளவில்லை.*

*இந்த நிலையில்தான் கொக்குத்தொடு வாய்ப்பகுதிகளில் மேலும் பல புதைகுழிகள் இருக்கலாம் என்ற சந்தேகம்எழுந்துள்ளது.*

*இலங்கையில் எத்தனையோ புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்டும் ஒன்றுக்கும் நீதியான, நேர்மையான வகையில்பதிலோ தீர்வோ கிடைக்கவில்லை.*

*இந்தநிலையில், உள்ளகபொறிமுறையிலே மக்கள் யாருக்குமே நம்பிக்கை இல்லை. யுத்தம் ஆரம்பிக்கப்பட்டகாலத்திலிருந்து இன்று வரை முழு பொய்யுரைப்பவர்களாகத்தான் இலங்கை அரசு இருக்கின்றது. எங்களுக்கு தேவைசர்வதேச பொறிமுறையூடாக நீதி கிடைக்க வேண்டும்.*

*எத்தனை தாய்மார் பிள்ளைகளை தேடி இறந்து விட்டார்கள். இப்படியான நிலைமையில் அவர்களுடையஏக்கம், அவர்களுடைய கண்ணீர் இவற்றிற்கு பதில் கூறியே ஆக வேண்டும்’ என்றார்.*

• • •




வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின்
உறவுகள் சங்கத்தின் மட்டக்களப்பு
மாவட்ட தலைவி
**அமலநாயகி**

*‘2017ம் ஆண்டில் இருந்து வடக்கு கிழக்கு இணைந்த போராட்டத்தின் மாபெரும் சக்திகளாக செயற்பட்டு எமது காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்காக நீதி கேட்டு போராடி வருகின்றோம்.*

*எங்களுக்கு உள்ளகப்பொறிமுறையில் எந்தவொரு நீதியும் கிடைக்காத பட்சத்தில் சர்வதேச தலையீட்டை நாம் கோரிவருகின்றோம். அந்த வகையில் 2018ம் ஆண்டு ஐ.நாவில் கூட எங்களுடைய கோரிக்கைகளை முன் வைத்துள்ளோம். ஆனாலும் சர்வதேசரீதியான பார்வைகள் மிகக்குறைவாகவே இருந்த வண்ணம் உள்ளது. இருந்தும் சர்வதேசத்தின்அமைப்புகள் சில முன் வந்து சில செயற்பாடுகளை செய்வதற்கு முன் வந்தாலும் அவர்களும் எம்மை உள்ளகபொறி முறைக்குள் எம்மை சிக்கவைக்கும் வேலைத் திட்டங்களையே செய்து வருகின்றனர்.*

*இதனால் இன்னும் காலதாமதம் ஆகும் நிலை ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக 200க்கும் மேற்பட்ட தாய்மார்கள்உயிரிழந்துள்ளனர். இக் காரணத்தினால் சாட்சியங்களை இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. மேலும் காலங்கள் தீர்வின்றி செல்லுமேயானால் மீதமுள்ள பெற்றோர் மற்றும் உறவுகளும் மரணித்து விடுவார்கள். எனவே சர்வ தேசம் எங்களுக்கானஒரு தீர்வினைப் பெற்றுத்தருவதற்கு முயற்சி எடுக்க வேண்டும் என வோண்டுகோள் விடுக்கின்றேன்’ என்றார்.*

• • •

# மூன்று முனைப் போட்டியில் முன்னணியில் இருப்பது யார்?

**ஜனாதிபதித் தேர்தலுக்கு இன்னும் ஒரு மாதம் கூட இல்லை. தேர்தல் பரப்புரைகள் சூடுபிடித்துள்ளன. தற்போதைய கள நிலைமைகள், தேர்தல் முடிவுகள் குறித்த கருத்துக்கணிப்புக்கள் எவ்வாறுள்ளன?**



**ஜனாதிபதித் தேர்தலுக்கான நிய மனப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் தேர்தல் பரப்புரைகள் சூடுபிடித்துள்ளது. அதிரடியான கட்சித் தாவல்களும், வாக்குறுதிகளும் அரசியலில் பரபரப்பை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன. இந்தப் பின்னணியில் தென்னிலங்கை கள நிலைமைகள் எவ்வாறிருக்கின்றது என்பது குறித்து ஆராய்வதற்காக கொழும்பு பல்கலைக்கழக பேராசிரியர் கோபாலபிள்ளை அமிர்தலிங்கம் அவர்கள் அனைத்துலக உயிரோடைத் தமிழ் வானொலியின் தாயகக்களம் நிகழ்ச்சிக்கு வழங்கிய நேர்காணலை இலக்கின் வாசகர்களுக்காக இங்கே தருகின்றோம். இந்த நேர்காணலை காணொளியில் YouTube இல் முழுமையாகப் பார்ப்பதற்கு இங்குள்ள QR Code இனை ஸ்கான் (Scan) செய்யவும்.**

ஜனாதிபதி ஆட்சிமுறை நடைமுறைக்கு வந்த பின்னர் பெரும்பாலும் இருமுனைப் போட்டியாகத்தான் இந்த ஜனாதிபதித் தேர்தல்கள் இருந்து வந்திருக்கின்றது. சிலவேளைகளில் வெற்றியாளர் யார் என்பதை முன்கூட்டியே அனுமானிக்கக்கூடிய நிலையும் இருந்தது. சிலவேளைகளில் ஒரு அலை வீசுவதையும் காணலாம். அந்தக் காலங்களில் சிங்கள – பௌத்த மக்கள்தான் ஜனாதிபதியைத் தீர்மானிப்பவர்களாக இருந்தார்கள்.

ஆனால், இப்போது, வரலாற்றில் முதல் தடவையாக, ஒரு மும்முனைப்போட்டி உருவாகியிருக்கின்றது. வெற்றியாளர் யார் என்பதை சொல்ல முடியாத நிலைதான் இன்றுவரை தொடர்கின்றது. ஆனால், தேர்தல் விஞ்ஞாபனங்கள் வெளிவந்து தேர்தல் நெருங்கும் போது, பிரதான வேட்பாளர்கள் மக்களை எவ்வாறு எதிர்கொள்கின்றார்கள் என்பதைப் பொறுத்து இது இரு முனைப்போட்டியாக இருக்குமா அல்லது மும்முனைப்போட்டியாக இருக்குமா என்பதைச் சொல்லக்கூடியதாக இருக்கும்.

ஆனால் இப்போது தென்பகுதியில் சமூகத்தின் பல்வேறு மட்டங்களிலும் இருப்பவர்களுடனும் பேசும்போது ஒவ்வொருவரும் ஒவ்வொருவிதமான கருத்தைச் சொல்கின்றார்கள். வெற்றியாளர் யார் என்பது தெளிவாகத் தெரியவில்லை.

அதேவேளையில் தென்பகுதியில் இப்போது ஒரு அலை வீசாத நிலையில் வடக்கு கிழக்கு தமிழ் மக்கள், முஸ்லிம்கள், மலையக மக்களுடைய வாக்குகள் முக்கியமான பங்கை வகிக்கப்போகின்றன.

**இந்த ஜனாதிபதித் தேர்தல் உண்மையில் ஒரு மூன்று முனைப் போட்டியா? அல்லது நாமல் களமிறங்கியிருப்பதால் நான்கு முனைப் போட்டியாகியுள்ளது என்று சொல்லாமா? நாமல் ராஜபக்ஷ இந்த கள நிலையில் எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்தப்போகின்றார்?**

அவர் பத்து இலட்சத்துக்கும் குறைவான வாக்குகளையே பெறுவார் என்று பலரும் கூறுகின்றார்கள். தென்பகுதியில் அவர்களுக்கென்று ஒரு வாக்கு வங்கி இருக்கக்கூடும். நாட்டின் பொருளாதார நெருக்கடிக்குக் காரணமானவர்கள் அவர்கள்தான் என்று மக்கள் இன்றும் நம்புகின்றார்கள். அதனால், நாடுதழுவிய ரீதியான வாக்குகள் அவருக்குக் கிடைக்குமா என்ற கேள்வி உள்ளது. அதனால், முதல் மூன்று வேட்பாளர்களைப் போல அதிகளவு வாக்குகளைப் பெறக்கூடிய ஒருவராக அவர் வருவாரா என்பதில் பலத்த சந்தேகம் உள்ளது.

**நாமல் ராஜபகடஷ இறுதி நேரத்தில் களமிறங்கியமைக்கு காரணம் என்ன?**

பல்வேறுபட்ட கோணங்களில் இதனைப் பார்க்க முடியும். ஒன்று - தற்போதைய ஜனாதிபதி வெற்றிபெற்றால் பொதுஜனபெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் அவருடன் சென்று விடுவார்கள். அடுத்த தேர்தலிலும் அவருக்கு ஆதரவான கூட்டணியில் போட்டியிடுவதற்கும் விரும்புவார்கள். அதனால் தமது கட்சியான பொது ஜன பெரமுன அழிந்துவிடும். அத னால், கட்சியைப் பாதுகாக்க வேண்டும் என்ற நிலையில் ராஜபக்சே குடும்பம் அந்த முடிவுக்கு வந்திருக்கலாம்.

இரண்டாவது கருத்து தற்போதைய ஜனாதிபதிக்கும் இவர்களுக்கும் இடையில் இரகசிய உடன்பாடு ஒன்றுள்ளது. இறுதி நேரத்தில் தமது முடிவை மாற்றலாம். அல்லது, இரண்டாவது தெரிவை அவருக்குக் கொடுக்குமாறு கேட்கலாம் என்ற சில கருத்துக்களும் உள்ளன.

அவர்கள் முதலில் வேறொரு வேட்பாளரைத்தான் களத்தில் இறக்கப்போவதாக கூறி வந்தார்கள். அவர் ஒரு வர்த்தகர். வெற்றிபெற முடியாத தேர்தலில் போட்டியிட அவர் மறுத்தமையால் நாமல் ராஜபக்சே களமிறக்கப்பட்டிருக்கலாம்.

**தேசிய மக்கள் சக்தி என்ற பெயரில் ஜே.வி.பி. இந்த தேர்தல் களத்தில் போட்டியிடுகின்றது. ஆரம்பத்தில் அவர்களுக்கு இருந்த ஆதரவு அலை இப்போது குறைந்துவிட்டது என்ற ஒரு கருத்துள்ளது. இது எந்தளவுக்கு உண்மை?**

பதில் - ஆம். மக்கள் இது குறித்து விரிவாகச் சிந்திப்பார்கள். இந்த ஜனாதிபதித் தேர்தல் முடிவடைந்தவுடன் பொதுத் தேர்தல் வரப்போகின்றது. கடந்த ஜனாதிபதித் தேர்தலில் அநுரகுமார திசாநாயக்க ஜனாதிபதித் தேர்தலில் பெற்ற வாக்குகள் 4 இலட்டத்து 50 ஆயிரத்தைவிட சற்று அதிகமானது. அவர்களுக்கு நாடாளுமன்றத்திலும் பெருமளவு பலம் கிடையாது. இந்த நிலையில் பொதுத் தேர்தலில் அவர்கள் 113 ஆசனங்களைப் பெற வேண்டும். இல்லையெனில் மற்றைய கட்சிகளில் அவர்கள் தங்கியிருக்க வேண்டியிருக்கும்.

அநுரகுமாரவைப் பொறுத்தவரையில் இரண்டு வெற்றிகள் அவருக்குத் தேவையாக இருக்கின்றது. ஒன்று - ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற வேண்டும். இரண்டு நாடாளுமன்றத் தேர்தலில் மிகப்பெரிய வெற்றியைப் பெற வேண்டும். இப்போது நாடாளுமன்றத்தில் தேசியப் பட்டியல் ஆசனம் ஒன்றையும் சேர்த்து மூன்று ஆசனங்கள் மட்டும்தான் அவர்களுக்குள்ளது. ஆக, அவர்கள் 110 ஆசனங்களை மேலதிகமாகப் பெற வேண்டியிருக்கும். இது ஜே.வி.பி.யைப் பொறுத்தவரையில் சாதாரண விசயமல்ல. இதனை மக்கள் சிந்தித்து செயற்படும் போது தேர்தல் காலம் நெருங்க இரண்டு போட்டியாளர்கள்தான் இருக்கப்போகின்றார்கள். இவ்வாறான விடயங்கள் இடம்பெறுவதாகத்தான் நான் நினைக்கிறேன்.

**நாட்டில் அரசியல் மாற்றத்தை ஏற்படுத்திய அரகலய போராட்டமக் குழுவினர் அமைத்துள்ள போராட்ட முன்னணி என்ற அமைப்பும் இம்முறை களத்தில் இறங்கியிருக்கின்றார்கள். அவர்களுக்கான ஆதரவு எவ்வாறுள்ளது?**

உண்மையில் இவர்கள் அரசியல் முறைமையில் மாற்றம் ஒன்றை ஏற்படுத்த முயன்றார்கள். இப்போதும் முயற்சிக்கின்றார்கள். ஆனால், அவர்களுடைய கட்டமைப்புக்கள் கிராம மட்டத்திலிருந்து கட்டியமைக்கப்பட்டதாக இல்லை. அதனால்தான் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் இந்த அரகலய போராட்டம் செயலிழந்தது.

ஏனெனில் இதனை அடுத்த கட்டத்துக்கு அவர்களால் கொண்டு செல்ல முடியவில்லை. அதனால், அவர்கள் பிழையானவர்கள், அவர்களுடைய சிந்தனை தவறானது என்று நான் சொல்ல வரவில்லை. ஆனால், அவர்களுடைய கட்டமைப்புக்கள் கிராமம் தோறும் கட்டியமைக்கப்படவில்லை.

அவர்களுக்குக் கூட, அடுத்த கட்டம் என்ன என்பதில் தெளிவிருக்கவில்லை. ஏனெனில் கோட்டாபாய ராஜபக்ஷவை வீட்டுக்கு அனுப்ப வேண்டும் என்ற ஒரு கோரிக்கையை மட்டும் முன்வைத்துத்தான் அந்தப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது. அதனால், ஜனாதிபதி மாற்றமடைந்தவுடன் அடுத்த கட்டத்தை நோக்கி அவர்களால் செல்ல முடியவில்லை. கிராம மட்டத்திலிருந்து இதனை முன்னெடுக்காத நிலையில் அரசியலில் பெரிய தாக்கம் எதனையும் அவர்களால் ஏற்படுத்த முடியாது.

**ரணில், சஜித் இருவருமே சிறுபான்மையினரின் வாக்குகள் தமக்கு கிடைக்கும் என்ற எதிர் பார்ப்புடன் செயற்படுகின்றார்கள். இதில் வெற்றி பெறக்கூடியவர் யார்?**

இதில் மிகப்பெரிய பிளவு நிலை காணப்படுகின்றது. முஸ்லிம்களைப் பொறுத்தவரையில் சில தலைவர்கள் ரணில் விக்கிரமசிங்கவுடன்

தொடர்ச்சி 10ஆம் பக்கம்

# நவாலியின் துயரம் நிறைந்த படுகொலைகள்

பாகம் I

யாழ்ப்பாணத்தின்தென்மேற்கேசண்டிலிப் பாய்ப் பிரதேசத்தில் அமைந்துள்ள நவாலிப் பகுதியில் பழைமை வாய்ந்ததும் சிறப்பு வாய்ந்ததுமாக கத்தோலிக்க மக்களின் சென்.பீற்றேஸ் தேவாலயமும், இந்துக்களின் ஸ்ரீகதிர்காம முருகன் ஆலயமும்,சென்ற். போல்ஸ் தேவாலயமும் உள்ளது.

1995ஆம் ஆண்டு ஜூலை மாதம் 9ஆம் திகதியன்று இராணுவத்தினர் "முன்னேறிப் பாய்தல்" என்ற பெயரில் யாழ்.குடாநாட்டின் வலிகாமம் மேற்குப்பகுதியை இலக்காகக்கொண்டு இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டவேளை மக்களைப் பாதுகாப்பாக ஆலயங்களில் இருக்குமாறு அறிவித்தார்கள். அதனைத் தொடர்ந்து, சங்கானை, சண்டிலிப்பாய், மாசியப்பிட்டி, தொட்டிலடி, சீரணிச்சந்தி, சுழிபுரம், சித்தன்கேணி, இளவாலை, பண்டத்தரிப்பு ஆகிய கிராமங்களைச் சேர்ந்த பல்லாயிரக் கணக்கான பொதுமக்கள் இடம்பெயர்ந்தனர். இதில் ஒரு பகுதியினரில் ஏறத்தாழ இரண்டாயிரத்து ஐநூறு பொதுமக்கள் நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயத்திலும்,ஸ்ரீகதிர்காம முருகன் ஆலயத்திலும், அருகில் உள்ள சென்ற் பீற்றர்ஸ் மகா வித்தியாலயத்திலும், தேவாலயத்தை அண்டிய பகுதிகளில் உள்ள வீடுகளிலும் தஞ்சமடைந்திருந்தனர்.

1995.07.09ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை மாலை 4:30 மணியளவில் நவாலி சென்ற் பீற்றேர்ஸ் ஆலயத்தினுள்ளும், வீதிகளிலும், நவாலி ஸ்ரீகதிர்காம முருகன் ஆலய வளாகத்திலும் இராணுவ நடவடிக்கைகள் காரணமாக அரசாங்கத்தின் அறிவுறுத்தலுக்கு அமைய தஞ்சமடைந்த வேளையில் நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயம் மீதும், முருகன் ஆலயத்தின் மீதும், அதன் சுற்றுப்புறத்திலுமாக விமானப் படையினரின் ஆஜன்ரீனா நாட்டுத் தயாரிப்பான "புக்காரா" விமானம் மிகவும் தாழ்வாகப் பறந்து ஒரே நேரத்தில் 13 குண்டுகளை வீசியதில் 165 பேர் சாவடைந்த கோரமான கொடூரமான தாக்குதல் சம்பவம் எல்லோரையும் அதிரப்பண்ணியது.இதில் தேவாலயத்தில் தஞ்சமடைந்திருந்த குழந்தைகள், பெண்கள், சிறார்கள், தாய்மார்கள் உட்படப் பலரதும் உடல்கள் சிதறுண்டு சம்பவ இடத்தில் உயிரிழந்தனர். சிறிலங்கா வான்படைகளின், இக் கொடூரமான தாக்குதலின் பொழுது, தேவாலயத்திற்குள்ளேயே 13 குழந்தைகளும் உடல் சிதறிப் பலியானதுடன்,குழந்தைகள் பெண்கள் உடபட இருநூற்றைம்பதிற்கும் மேற்பட்டவர்கள் படுகாயமடைந்தனர். காயமடைந்தவர்களிற் பலர்வைத்தியசாலையில் உயிரிழந்தார்கள். இந்தச் சம்பவத்தில் கையிழந்து காலிழந்து தலையிழந்து வீதியில் சிதறிக் குற்றுயிராகக் கிடந்த அந்தக் கொடுமையான காட்சியை எப்படி மறக்க முடியும்.?



தேவாலயத்தின் சிதைந்த தோற்றம் தேவாலயத்தைப் பார்த்து திகைத்து நிற்கும் பங்குத்தந்தை விமானப்படையினரின் சரமாரியான குண்டுவீச்சில் நவாலி சென்ற் பீற்றர்ஸ் தேவாலயமும், சின்னக் கதிர்காமம் ஆலயமும் அருகில் உள்ள 67க்கும் மேற்பட்ட வீடுகளும், அதனைச் சூழந்துள்ள கட்டடங்களும், அருகாமையில் இருக்கும் சென். பீற்றரஸ் மகாவித்தியாலயமும்,குருமனையும் இடிந்து விழுந்தது. இந்தக் கட்டிட இடிபாடுகளுக்குள் இருந்து மேலும் 65 உருக்குலைந்த சடலங்கள் மீட்டெடுக்கப்பட்டன. அன்று வலிகாமம் முழுவதும் இடம்பெற்ற வான் தாக்குதலினால் அந்தப் பகுதி முழுவதும் அதிர்ந்து கொண்டிருந்தது. லீப் போர்வேட் (*Leap Forward*) என்ற முன்னேறிப் பாய்தல் எனப்பெயரிட்பபட்ட இராணுவ நடவடிக்கையை வலிகாமம் பகுதியில் தொடங்கிய இராணுவத்தினர் பலாலியில் இருந்தும் அளவெட்டியில் இருந்தும் எறிகணைகளை மக்கள் குடியிருப்புக்களைநோக்கி வீசிக் கொண்டிருந்தனர்.



வல்வை.ந.அனந்தராஜ்

அந்தநேரம் உலங்குவானூர்திகளில் இருந்தும் சகல வீதிகளையும் நோக்கித் எறிகணைத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதில் வீதிகளில் இறந்து கிடந்தவர்களையும்,காயப்பட்டு இரத்தம் சிந்திக் கொண்டிருந்தவர்களையும் மருத்துவமனைகளுக்குக்கூட எடுத்துச் செல்லமுடியாத அவலநிலையும் காணப்பட்டது.வாகனங்களை இயக்குவதற்கு எரிபொருள்களுமற்ற பொருளாதாரத்தை இருந்ததால், வாகன வசதிகளற்ற நிலையும் காணப்பட்டது.அதேவேளை காயமடைந்தவர்களைக் காப்பாற்ற மருந்தகங்களோ, மருத்துவர்களோ சிகிச்சை நிலையங்களோ காணப்படாத நிலையே காணப்பட்டது.

அன்றைய தாக்குதல்களின் போது பொதுமக்கள் சேவையில் ஆர்வத்துடன் செயலபட்ட நவாலி மகா வித்தியாலய மாணவத் தலைவன்; சாம்பசிவம் பிரதீஸ் உணவு, குடிதண்ணி, மற்றும் சேவைகளை வழங்கிக்கொண்டிருந்தபோது தலை சிதறிச் சாவடைந்தான். அந்தப் பயங்கரமான சூழலிலும் சேவை யாற்றிய வலி தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவின் ஜே-134, நவாலி வடக்கு கிராம அலுவலர் செல்வி ஹேமலதா செல்வராஜா,சில்லாலை பிரிவு மூத்த கிராம அலுவலர் பிலிப்புப்பிள்ளை கபிரியேல்பிள்ளை ஆகியோரும் அந்தச் சம்பவத்தில் கொல்லப்பட்டனர்அதேபோன்று, இடம்பெயர்ந்த மக்களுக்குத் தொண்டுப்பணியில் ஈடுபட்டு உணவு,குடிநீர் மற்றும் சேவைகளை வழங்கிக் கொண்டிருந்த 48 தொண்டர்களும் விமானக்குண்டு வீச்சில் இரத்தம் சிந்திக் கொண்டிரு;நத நிலையில் மருத்துவ உதவிகள் எதுவும் கிடைக்காததால், அந்த இடத்தில் துடிதுடித்து உயிரிழந்தனர்.

தேவாலயத்தினுள்சிதறியுள்ளதமிழர்களின் சடலங்கள் குடும்ப உறவுகளை இழந்து அலறும் தாய் உயிரிழந்த பொதுமக்களினதும்,தொண்டுப் பணியாளர்களினதும் உடல்களை அப்புறப்படுத்துவதிலும் காயப்பட்டவர்களை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்வதில் ஊர் மக்கள் ஈடுபட்டனர். அன்று இரவு தொடக்கம் மறுநாட் காலை வரை உயிரிழந்தவர்களின் உடல்கள் உழவு இயந்திரங்களிலும், வாகனங்களிலும் ஏற்றி யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டன. மூன்று தினங்கள் கழிந்த நிலையிலும் சடலங்களைத் தேடும்பணி தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டது.11.07.1995 செவ்வாய்க் கிழமை வரை உறவினர்களால் அடையாளம் காணமுடியாது இருந்த இருபத்துநான்கு சட லங்களை யாழ். வைத்தியசாலை நிர்வாகமும் யாழ்.நோயாளர் நலன்புரிச் சங்கமும் இணைந்து சமய முறைப்படி அரியாலை செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்தன.



இக்காலப் பகுதியில் சிறிலங்கா விமானப் படையினரால் வணக்க தலங்கள் தாக்கப்பட்டு வந்த நிலையில், இத்தாக்குதல்கள் இடம் பெறுவதற்குச் சில நாட்களின் முன்னர் யாழ் மறைமாவட்டப் பேராயர் அதி.வணக்கத்திற்குரிய தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை, ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்காவுக்கு அனுப்பிவைத்த கடிதத்தில், "வணக்க தலங்களின்மீது குண்டுகளைவீசித்தமிழ் மக்களைக் கொல்லுவதை நிறுத்துமாறு கோரியிருந்தபோதும், இக் கோரமான தாக்குதல்கள் இடம் பெற்றமையை சர்வதேச மனிதஉரிமை அமைப்புக்கள் கண்டனம் தெரிவித்திருந்தன. அதேவேளை விடுதலைப் புலிகளின் மோட்டார் தாக்குதல்களினாலே நவாலி சென் பீற்றர்ஸ் தேவாலயம் தாக்கப்பட்டது என சிறிலங்கா இராணுவத்தரப்பு அறிக்கை வெளியிட்டு உண்மையை மறைக்க முயற்சித்த போதும், சர்வதேசத்தின் கண்டனங்கள் சிறிலங்கா அரசாங்கத்தின் மீதே பாய்ந்தன.

இலங்கை விமானப்படை நவாலி சென்ற். பீற்றர்ஸ் தேவாலயத்திலும்,முருகன் கோயிலின் மீதும் 13 குண்டுகளை வீசியது. இராணுவத்தினரின் அறிவுறுத்தலுக்கு அமைய தேவாலயத்தில் தஞ்சம் புகுந்திருந்த 165 க்கும் மேற்பட்ட தமிழர்கள் சம்பவ இடத்திலேயே கொல்லப்பட்டனர். இறந்தவர்களில் குறைந்தது 13 குழந்தைகளும், வயோதிபர்களும் இருந்தனர், மேலும் காயமடைந்தவர்கள் முதலில் உள்ளூர் மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

தொடரும்...

# குழந்தைகளின் சமூகமயமாக்கலில் வீட்டுக் கல்வியின் பங்களிப்பு



வீட்டுக் கல்வி மூலம் குழந்தைகள் பல்வேறு அனுபவங்களைப் பெறுகின்றனர். குடும்பச் சூழலுக்குள் குழந்தைகளின் கல்வியில் பெற்றோரின் தாக்கத்தை இந்தக் கட்டுரையில் ஆராய்வோம். ஒவ்வொரு குடும்பமும் வெவ்வேறு கல்வி திறன்களைக் கொண்டிருப்பதற்கான பிரச்சினைகளை இது மையப்படுத்துகிறது. இன்றைய சமூகச் சூழலில், குடும்பத்திற்கு ஒரு பெரிய மற்றும் மிகவும் கடினமான பொறுப்பு உள்ளது. அது பிள்ளைகளின் உடல் நலம், உள நலம் ஆகியவற்றில் சரியான கவனம் செலுத்துவதாகும். குழந்தைகளின் ஒட்டுமொத்த கல்வி, அவர்களின் அறிவுசார் உறவுகளின் வளர்ச்சி, அத்துடன் மதிப்புகள் மற்றும் நம்பிக்கைகள் மற்றும் அணுகுமுறைகள், ஒரு உறுதியான மற்றும் நல்ல நடத்தை கொண்ட கலாசார உறவுகளுக்கான பழக்கவழக்கங்களை குடும்பம் மற்றும் குழந்தை வாழும் சமூகமே ஏற்படுத்துகின்றது.

மனித வரலாற்றில் பெற்றோர் அல்லது குடும்பம் முழுவதுமாக, கல்விப் பணியை நேரடியாக வைத்திருப்பவர்களில் ஒருவர். பெற்றோர் என்ற சொல், இது போன்ற கருத்துகளின் தொகுப்பாகப் புரிந்து கொள்ளப்பட வேண்டும். முதலாவதாக, குழந்தைகளின் பிறப்புக்கான அவர்களின் திட்டமிடல் மற்றும் முடிவு மற்றும் ஒட்டுமொத்த பிறப்பு விகிதம். இரண்டாவதாக, அவர்களின் குழந்தைகளை வளர்ப்பதில் அவர்களின் கவனிப்பு மற்றும் பங்களிப்பு. மூன்றாவதாக, பெற்றோர்களின் செயல்கள் மற்றும் செயல்பாடுகள் ஒரு ஒட்டுமொத்த பெற்றோரின் சாதனையை நோக்கிய இலக்குகள் ஆகும்.

பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளின் வளர்ச்சி மற்றும் கல்வி தேவை ஏற்படும் போது ஒரு முக்கியமான நிலைப்பாட்டை எடுக்கிறார்கள். மொத்தத்தில், பெற்றோர்கள் தாங்களே ஒட்டுமொத்த குழந்தைகளின் உடல் மற்றும் அறிவுசார் மீது கவனம் செலுத்த வேண்டும். அவர்கள் சுதந்திரமாக மற்றும் அவர்கள் வாழும் சமூகத்தின் சவால்களை எதிர்கொள்ள தயாராக இருக்கும் வரை குழந்தைகளின் வளர்ச்சிக்கான வேலைகளை பெற்றோர்கள் அறிந்திருக்கிறார்கள். ஆனால் அதே நேரத்தில் அவர்களுக்கு கற்பித்தல் தேவை அவர்களின் குழந்தைகளின் கல்வி உரிமை பற்றிய தகவல்களும் அவசியமாகும். குழந்தைகளுக்கு பெற்றோர்கள் மற்றும் குடும்பம் முழுவதுமாக நேரடி தலைவர்கள் மற்றும் ஆதரவாளர்களின் பாத்திரத்தை வகிக்கிறனர்.

குழந்தைகளின் திறன்கள் மற்றும் அவர்களின் ஒட்டுமொத்த கற்றல் திறன் வெற்றிபெற அவர்களை வழிநடத்த வேண்டும். ஒரு சிக்கலான செயல்முறையாக கல்வி உள்ளது. எனவே, பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு ஆதரவாக செயல்பட வேண்டும். அவர்களின் வீட்டுப்பாடம், இந்த வழியில் அவர்கள் தங்கள் பெற்றோரின் ஆதரவை ஒரு முக்கிய உத்திகளில் ஒன்றாக வழங்குகிறார்கள். பாடசாலையில் தங்கள் குழந்தைகளின் வெற்றிகரமான கல்விக்கும், குடும்பத்தில் குழந்தைகளின் கல்வி நிலை அதிகமாக சார்ந்துள்ளது. பெற்றோரின் கல்வி நிலை குடும்ப உறவுகளையும் வெற்றிகரமான உறவுகளையும் கடுமையாக பாதிக்கிறது. பாடசாலையில் நல்ல முடிவுகளைப் பெறுவதற்கு குழந்தையின் மீது பெற்றோரின் கட்டுப்பாடு நிரந்தரமாக இருக்க வேண்டும்.

குழந்தைக்கு பெற்றோர் செய்யும் கல்விச் செயல்பாட்டில் வெற்றி பெற நமக்குத் தேவை குழந்தைகளின் உடல் வளர்ச்சியுடன் தொடர்புடைய சில விதிகளை நன்கு அறிந்திருக்க வேண்டும், குழந்தையின் உளவியல் வளர்ச்சியிலும் சிறப்பு கவனம் செலுத்தப்பட வேண்டும். குழந்தை பாடசாலை சேரும் வரை அல்லது பாடசாலை தொடங்கும் வரை பெற்றோர்கள் முதன்மையான கல்வியாளர்களாக இருப்பார்கள். அம்மா எப்போதும் குழந்தைகளுடன் நெருக்கமாக இருக்க வேண்டும். தாய் தான் முதல் மற்றும் சிறந்த ஆசிரியை. ஒரு குடும்பத்தில் தந்தை ஒரு மிக முக்கியமான காரணியாகும், பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளின் வலுவான முன்மாதிரி மற்றும் மிகப்பெரிய செல்வாக்கு ஆகும். குழந்தைகள் எப்போதும் பெற்றோரை ஏற்றுக்கொள்கிறார்கள். குழந்தைகளின் அன்றாட வாழ்க்கை, மிக முக்கியமாக அவர்களின் அன்றாட கல்வியில், எதிர்காலம் மிகவும் அழகாக இருக்க பெற்றோரின் பங்களிப்பு அவசியமாகும்.

எனவே, குழந்தைகள் தாங்களாகவே வளரும்போது குடும்பத்தில் தங்கள் பொறுப்புகளையும் பங்கையும் கற்றுக்கொள்கிறார்கள் மற்றும் பெற்றோர்களாக அவர்கள் இந்த விடயத்தில் தந்தை தாயின் பாத்திரத்தை வகிக்க முதிர்ச்சியடைகின்றனர். தந்தை தாய்க்கும் குழந்தைக்கும் இடையிலான உறவு பலமாகிறது. ஒரு குடும்பத்தில் வெற்றிகரமாக வளர்க்கப்பட்ட மற்றும் நன்கு படிக்கும் குழந்தைகளைப் பெற, பெற்றோர்களே தங்களை அர்ப்பணிக்க வேண்டும். மேலும் குழந்தைகளை வளர்ப்பதிலும், கல்வி கற்பதிலும் முக்கிய பங்கு வகிக்கும் சில கூறுகளுக்கு பெற்றோர்கள் கவனமாக இருக்க வேண்டும்

குழந்தைகளுக்கு குடும்பத்தில் பெற்றோரின் முக்கிய பங்கு அவர்களின் கல்வி மற்றும் வளர்ப்பு ஆகும். குழந்தைகளின் முக்கிய கடமை கடினமாகவும் சரியாகவும் படிக்க வேண்டும். இந்த நோக்கத்திற்காக அவர்கள் இருக்க வேண்டும். சரியான கற்றல் மற்றும் படிப்பின் விதிகள் மற்றும் கொள்கைகளின் அடிப்படையில் எவ்வாறு படிப்பது என்பதை நன்கு அறிவுறுத்த வேண்டும். இது அவர்களுக்கு வேலையைப் பற்றிய நடத்தைவாத அணுகுமுறைனூடாக உலகின் கதவுகளைத் திறக்க சாத்தியமாக்குகிறது.

குழந்தையின் வளர்ச்சி என்பது குழந்தையின் ஒட்டுமொத்த ஆளுமை உருவாக்கம் ஆகும். குழந்தையின் அடிப் படை அம்சங்கள், ஆர்வங்கள், குணாதிசயங்கள் மற்றும் குறிப்பாக அவர்களை அடையா ளம் காண பெற்றோர்களினாலேயே முடியும். குழந்தையின் ஆளுமை உருவாக்கம் பெரும்பாலும் குழந்தையின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்டுள்ளது. பொதுவாக சமூகமயமாக்கல் செயல்முறை நிச்சயமாக இப்போ தெல்லாம் மிக முக்கியமான ஒன்றாகும். பெற்றோரினால் வீட்டில் குழந்தைப் பருவத்தின் ஆரம்ப கட்டத்திலிருந்தே குழந்தைகள் சமூகச் சூழலால் வித்திடப்படுகின்றது. பொதுவாக குடும்ப உறுப்பினர்களுக்கு இடையிலான உறவு. இந்த பரிவாரத்தில், குழந்தை சமூகத்தில் முதல் படிகளை வைக்கிறது,

பெற்றோரிடமிருந்து குழந்தைகளுக்கு கல்வி ஆதரவை வழங்குதல் என்பது வீட்டுப்பாடம் போன்ற பிரச்சினைகள், குழந்தைகள் அன்றாடம் கற்றலை உருவாக்க உதவும். இது பெற்றோரால் தூண்டப்பட வேண்டும். பாராட்டுதல், பெருமைப் படுத்துதல் மற்றும் வெகுமதி அளிப்பதன் மூலம் குழந்தைகள் இந்த வேலையைச் செய்யும் விதத்தைப் பற்றிய மதிப்பை உயர்த்தும். மற்ற குடும்ப உறுப்பினர்களை மதிக்கும் உணர்வு என்பனவும் வளரும். குழந்தைகளுடன் கல்வி மற்றும் உருவாக்குதல் செயற்பாடு, பின்னர் அவர்கள் வெற்றிகரமான குடிமக்களாக வளர பெற்றோரின் பங்களிப்பு அவசியமாகும். பெற்றோர் குழந்தைகளுக்கு வெகுமதி அளிப்பதும், பாராட்டுவதும் ஒரு உண்மையான தூண்டுதலாகும். இதனால் பெற்றோர் பிள்ளைகளுக்கிடையிலான உறவு பலப்படுத்தப்படும் அத்துடன் பிள்ளைகளின் கல்விச் செயற்பாடுகளும் முன்னேற்றமடையும்.

• • •

**சண்முகம் ஜெயந்தினி**
நான்காம் வருட கல்வியியல் சிறப்பு கற்கை மாணவி,
கல்வி, பிள்ளை நலத்துறை,
கிழக்குப் பல்கலைக்கழகம்.

**மூன்று முனைப் ... தொடர்ச்சி ...**

இருக்கின்றார்கள். வேறு சிலர் சஜித்துக்கு ஆதரவாக உள்ளார்கள். இளைஞர்களைப் பொறுத்தவரையில் அநுரகுமாரவுக்கு ஆதரவுள்ளது.

மலையகத்தைப் பொறுத்தவரையில் ஜீவன் தொண்டமான் ரணிலுக்கு ஆதரவு. மனோ கணேசன், திகாம்பரம் போன்றவர்கள் சஜித்துக்கு ஆதரவாக உள்ளனர். ஆகவே மலையக வாக்குகளும் இரண்டாகப் பிளவுபட்டுள்ளது.

வடக்கு - கிழக்கு மக்களுடைய வாக்குகள் எவ்வாறு செல்லும் என்பது வெளிப்படையாகத் தெரியாமல் உள்ளது. தமிழ்ப் பொது வேட்பாளருடைய விஞ்ஞாபனம் வெளிவந்து அவருடைய பரப்புரைகள் தீவிரமடையும் போது அவருக்குப் பின்னால் கணிசமான வாக்குகள் செல்வதற்கும் வாய்ப்புள்ளது. அரியநேத்திரன் வெறுமனே ஒரு சுயேச்சையாக களமிறங்கவில்லை. அவருக்குப் பின்னால் பல சிவில் அமைப்புக்கள், கட்சிகள் உள்ளன. இது வரலாற்றில் முதல்தடவை. முன்னர் குமார் பொன்னம்பலம், சிவாஜி லிங் கம் போன்றவர்கள் களமிறங்கியிருந்தாலும், பரந்துபட்ட ஆதரவுத் தளத்துடன் ஒரு தமிழ் வேட்பாளர் களமிறங்கியிருப்பது இதுதான் முதல் தடவை. அதனால், அரியநேத்திரன் பெறும் வாக்கு கள் எவ்வளவு என்பது இங்கு முக்கியமாகக் கண் காணிக்கப்படும்.

# காழ்ப்புணர்ச்சி வேண்டாம்

துரைசாமி நடராஜா

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாட்சம்பளமாக 1700 ரூபாவை வழங்குவதற்கான தீர்மானம் சம்பள நிர்ணய சபையில் நிறைவேற்றப்பட்டுள்ளது. இது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். இதேவேளை இந்த தீர்மானம் தொடர்பில் எதிர்வரும் 14 நாட்களுக்குள் தமது ஆட்சேபனையைத் தெரிவிக்கலாம் எனவும் தொழில் திணைக்களம் தெரிவித்துள்ளது. எவ்வாறெனினும் இச்சம்பள உயர்வானது சமகாலத்தில் தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடிக்கு ஓரளவேனும் தீர்வினைப் பெற்றுக் கொடுப்பதாக அமையும் என்பதையும் மறுப்பதற்கில்லை. இந்நிலையில் காழ்ப்புணர்ச்சியை மையப்படுத்தி தொழிலாளர்களை திசை திருப்ப எவரும் முற்படுதலாகாது என்பதோடு, இச்சம்பள உயர்வினை சாத்தியப்படுத்திக் கொள்வதற்கும், மேலும் அதிகரித்துக் கொள்வதற்கும், அரசியல் மற்றும் கட்சி பேதங்களை மறந்து சகலரும் ஒன்று பட வேண்டியது மிகவும் அவசியமாகும்.




ஒரு நாட்டின் அபிவிருத்தி என்பது உழைப்பாளர்களின் கைகளில் தங்கியுள்ளது. உழைப்பாளர்கள் நாட்டை சிருஷ்டிக்கின்றார்கள். பெருந்தோட்ட மக்களும் இதற்கு விதி விலக்காகிவிடவில்லை. இந்நாட்டின் தேசிய வருவாயில் கணிசமான வகிபாகம் அவர்களுக்கு சொந்தமானதாக காணப்படுகின்றது. 1959 இல் இலங்கை அந்நியச் செலாவணி உழைப்பில் தேயிலையின் வகிபங்கு 59.6 வீதமாக இருந்தது. 1989 இல் 24.3, 1990 இல் 24.9 வீதமாக இவ்வகிபாகம் அமைந்திருந்தது. 1990 கள் வரையில் இலங்கையின் ஏற்றுமதிக்கான வர்த்தகப் பயிர்களில் தேயிலையே முதலிடத்தை வகித்து வந்தது. இதில் பெருந்தோட்டங்களின் பங்களிப்பும் மிகவும் அதிகமாகும். இதேவேளை தேயிலை உற்பத்தியைப் பொறுத்தவரையிலும் பெருந்தோட்டங்கள் பின்நிற்கவில்லை. 1995 இல் பெருந்தோட்ட தேயிலை உற்பத்தி 168.8 மில்லியன் கிலோ கிராமாக காணப்பட்ட நிலையில் இவ்வருடத்தில் சிறுதோட்ட தேயிலை உற்பத்தி 111.3 மில்லியன் கிலோ கிராம்களாக காணப்பட்டது. எனினும் பின்வந்த காலங்களில் சிறுதோட்டங்களின் ஆதிக்கம் வலுப்பெற்ற நிலையில் பெருந்தோட்டங்கள் பின்தள்ளப்படும் நிலை உருவானது. அத்தோடு இலங்கையின் தேசிய வருமானத்தில் ஆடைத் தொழிற்றுறை, வெளிநாட்டு தொழில், சுற்றுலாத்துறை நிலைமைகள் என்பனவும் படிப்படியாக ஆதிக்கம் செலுத்தி இருந்ததையும் அவதானிக்கக் கூடியதாக இருந்தது. எவ்வாறெனினும் இலங்கை தேயிலையின் மவுசு சர்வதேச சந்தையில் இன்னும் குறைந்துவிடவில்லை.

### புதிய உத்திகள்

தேயிலைத் தொழிற்றுறைக்கும் பெருந்தோட்ட மக்களுக்கும் இடையிலான பிணைப்பு மிகவும் நீளமானது என்பதோடு ஆழமானது மாகும். பெருந்தோட்ட சமூகத்தில் பலர் தேயிலைத் தொழிற்றுறையில் நேரடியாக தங்கி இருக்கின்றனர். அத்தோடு மறைமுகமாக இத்தொழிற்றுறையில் பல்லாயிரக்கணக்கானோர் தங்கி வாழ்வதையும் எம்மால் அறிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது. பெருந்தோட்டத் தொழிலாளர்களிடையே மாற்றுத் தொழில் முயற்சிகள் குறைவாக காணப்படுகின்ற நிலையில் தேயிலைத் தொழில் அடிநாதமாக விளங்குகின்றது. எனவே இத்தொழிற்றுறையை நம்பி வாழும் மக்களுக்கு உரமூட்டும் வகையில் உழைப்பிற்கேற்ற ஊதியம், சிறந்த குடியிருப்பு வசதிகள், மருத்துவ சுகாதார நிலைமைகள், சமூகப் பாதுகாப்பு, தொழிற்றுறையில் புதிய உத்திகள் போன்ற பல செயற்பாடுகளிலும் அபிவிருத்தியை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டிய ஒரு தேவை காணப்படுகின்றது. எனினும் இது எந்தளவுக்கு சாத்தியமாகியுள்ளது என்று வினவுகையில் நிலைமைகள் திருப்தி தருவதாக இல்லை. 'சாண் ஏறினால் முழம் சறுக்கும்' ஒரு போக்கினையே பெரும்பாலும் அவதானிக்க முடிகின்றது. பெருந்தோட்டத் துறையில் மேற்கண்ட துறைகளில் காணப்படும் பின்னடைவான வெளிப்பாடுகள் இன்றைய இளைஞர் யுவதிகள் அத்துறையில் ஈடுபடுவதற்கு தடைக்கல்லாக இருந்த வருகின்றது என்பதனை யாவரும் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.




பெருந்தோட்டத் தொழிலாளர் சம்பள உயர்வு குறித்து நாம் நோக்குகின்றபோது இவர்களுக்கான ஊதிய உயர்வு தொடர்பில் தொடர்ச்சியாகவே இழுபறி நிலைமைகள் இருந்து வந்துள்ளன. 1830 களில் ஆரம்பிக்கப்பட்ட பெருந்தோட்டங்கள் 1929 ம் ஆண்டு வரையிலும் சுமார் 100 வருடங்களாக இங்கு வேலை செய்கின்ற தொழிலாளர்களுக்கென அடிப்படையில் குறைந்தபட்ச சம்பளம் ஒன்றை நிர்ணயிக்கும் சட்டத்தைக் கொண்டுவரவில்லை என்பது முக்கியஸ்தர்களின் கருத்தாகும். பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச கொடுப்பனவை நிர்ணயிக்க வேண்டும் என்று கூறப்பட்டபோதெல்லாம் இக்கோரிக்கையானது தோட்ட முகாமையாளர்களுக்கு எரிச்சல் ஊட்டும் விடயமாக கருதப்பட்டது. இது அவர்களின் விருப்பங்களுக்கு எதிராக மேற்கொள்ளும் நடவடிக்கையாக கருதப்பட்டது மட்டுமன்றி சோம்பேறிகளே குறைந்தபட்ச கொடுப்பனவைக் கேட்பார்கள் என்று வேதனம் மறுக்கப்பட்டது. இருந்தபோதும் இந்திய அரசாங்கம் தொழிலாளர்களுக்கான குறைந்தபட்ச கொடுப்பனவு வழங்குவதை நிர்ணயிக்கத் தவறுமாயின் தமிழகத்திலிருந்து இலங்கைக்கு வரும் தொழிலாளர்களை கட்டுப்படுத்த வேண்டியேற்படும் என்ற தொடர்ச்சியான மிரட்டல்கள் காரணமாக 1927 ம் ஆண்டு இந்திய தொழிலாளர்களுக்கான குறைந்தபட்ச வேதனச் சட்டம் *(The Minimum Wages(Indian Labour) Ordinance 1927)* கொண்டு வரப்பட்டதாக வலியுறுத்தல்கள் உள்ளன. இந்திய தொழிலாளர்களின் சம்பளத்தை நிர்ணயிப்பதற்கு கொண்டு வரப்பட்ட முதலாவது சட்டமும் இதுவாகும் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.




பெருந்தோட்டத் தொழிலாளர் சம்பள உயர்வானது கூட்டு ஒப்பந்த நடைமுறைக்கு முன்னதாக சம்பள நிர்ணய சபையின் மூலமாகவே தீர்மானிக்கப்பட்டு வந்தது. எனினும் இதில் காணப்பட்ட குறைபாடுகள் காரணமாக கூட்டு ஒப்பந்த முறைக்கு வலுசேர்க்கப்பட்டதும் தெரிந்ததேயாகும். எனினும் பிற்காலத்தில் கூட்டு ஒப்பந்தம் தொடர்பாகவும் விமர்சனங்கள் மேலெழுந்த நிலையில் இதனை ஒரு 'மரண சாசனம்' என்றும் சிலர் கண்டித்திருந்தனர். இதேவேளை கூட்டு ஒப்பந்தத்தின் சரத்துக்களை தோட்ட நிர்வாகம் அடிக்கடி மீறிவருவதாக தொழிலாளர்கள் குற்றம் சுமத்தி வந்த நிலையில் இருசாராருக்கும் இடையே அடிக்கடி முரண்பாடுகளும் தலை தூக்கின. அரசியல் தொழிற்சங்கவாதிகளும் இதன் போது தொழிலாளர்களுக்கு சார்பாக குரல் கொடுத்திருந்தனர். இத்தகைய பல இடையூறுகளுக்கும் மத்தியில் தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பள உயர்வு அவ்வப்போது பெற்றுக் கொடுக்கப்பட்டது. இதனிடையே சமகால பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் நான்கு பேரைக் கொண்ட ஒரு தொழிலாளர் குடும்பத்துக்கு ஆகக் குறைந்த நாளாந்த வருமானம் 2321 ரூபாவாக காணப்பட வேண்டும் என்று பேராசிரியர் எஸ்.விஜயச்சந்திரன் அண்மையில் மேற்கொண்ட ஆய்வொன்று புலப்படுத்துகின்றது.

### சம்பள நிர்ணய சபை

இந்நிலையில் அண்மையில் பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு 1700 ரூபா சம்பள உயர்வு வழங்கப்பட வேண்டுமென அழுத்தம் கொடுக்கப்பட்டது. இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் இதன் பிரதான சூத்திரதாரியாக காணப்பட்ட நிலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் இது தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தி இருந்தார். எனினும் 1700 ரூபா சம்பள உயர்வு கோரிக்கையை சாதகமாக்கிக் கொள்வதென்பது அவ்வளவு இலகுவான காரியமாக அமைந்தது விடவில்லை. கம்பனிகள் இத்தொகையை வழங்குவதற்கு உடன்படாத நிலையில் இதற்கென தனது பக்க நியாயங்கள் பலவற்றையும் முன்வைத்திருந்தன. தேயிலை உற்பத்தியில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி, உலக சந்தையில் தேயிலையின் விலை வீழ்ச்சி போன்ற பல காரணங்களையும் கம்பனியினர் இதன்போது முன்வைத்திருந்தனர். இதனிடையே 150 வருட வேதன முறையை மாற்றியமைக்க வேண்டுமென்று கம்பனிகள் வலியுறுத்தியதுடன் வருமான பங்கீட்டு முறைக்கு அழுத்தம் கொடுத்திருந்தன.

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

# இலங்கைத் தேர்தலில் தமிழர் இருப்பைக் காட்டும் பொது வேட்பாளர்!



இனவழிப்புப் போரின் உச்சமாக முள்ளிவாய்க்கால் பேரவலம் இடம்பெற்று 15 ஆண்டு காலம் முடிந்து விட்டது. ஈடுசெய் நீதிக்காகத் தாயகத்திலும் தமிழ்நாட்டிலும் புலம்பெயர் தமிழுலகிலும் பல்வேறு வழிகளில் போராடியிருப்பினும், ஐநா மனிதவுரிமைப் பேரவையில் பலமுறை விவாதித்துப் பல தீர்மானங்கள் இயற்றியிருப்பினும், சில ஐநா அறிக்கைகள் வெளிவந்திருப்பினும் இனவழிப்புக்கு நீதி கிட்டவில்லை என்பது மட்டுமல்ல, நடந்தது இன வழிப்பு என்பதே பன்னாட்டரங்கில் அறிந்தேற்கப் படவில்லை.

உள்நாட்டிலும் சிங்கள பௌத்த அரசின் இராணுவ வன்பறிப்பு தொடர்கிறது. குறிப்பாக வடக்கில் சிங்களப் படை குவிக்கப்பட்டுள்ளது. வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் அன்புக் குரியவர்கள், குறிப்பாகத் தாய்மார்கள் ஆண்டுக் கணக்கில் போராடி வருகின்றார்கள். போர் முடிந்து இத்தனைஆண்டுகளுக்குப்பிறகும்போர்க்கைதிகள் சிறையிலிருந்து முழுமையாக விடுதலை செய்யப்படவில்லை. போரில் உயிரிழந்தவர்களை நினைவேந்தவும் கூட தமிழர்களுக்குப் பல தடைகள் எழுப்பப்படுகின்றன.

எப்படியாயினும், தமிழ் மக்களை இராணுவ வகையில் தோற்கடித்து 15 ஆண்டுகளுக்குப் பிறகும் தமிழ் மக்கள் தாயகத்தில் போராடுவதைசிங்களத்தால்தடுக்கமுடியவில்லை. அரசியல் வகையில் தமிழ்த் தேச மக்கள் ஏற்கும் படியான ஒரு தீர்வை அதனால் முன்மொழியவும் முடியவில்லை.

இந்தப் பகைப்புலத்தில்தான் சிறிலங்க அரசுத் தலைவருக்கான பொதுத் தேர்தலில் வருகிற செப்டெம்பர் 21ஆம் நாள் வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது. சிறிலங்காவின் ஒரு கோடியே எழுபது இலட்சம் வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். இது வரை இல்லாத அளவுக்கு 39 வேட்பாளர்கள் இறுதியாகக் களத்தில் உள்ளனர்.

இப்போது அரசுத் தலைவராக இருக்கும் இரணில் விக்கிரமசிங்கா, எதிர்க்கட்சித் தலைவரான சஜித் பிரேமதாசா, மக்கள் விடுதலைக் கட்சி (ஜனத விமுக்தி பெரமுனா) சார்பில் அனுரகுமார திசநாயகா, மகிந்தாவின் மகன் நாமல் ராசபக்ச, கொலைப்படைத் தலைவன் சரத் பொன்சேகா ஆகியோர் முகன்மை வேட்பாளர்கள் ஆவர்.

இந்த சிங்கள வேட்பாளர்களில் யாராவது தமிழர்களுக்கு நீதியும் அரசியல் தீர்வும் கிடைக்க ஒரு துரும்பாவது கிள்ளிப் போடுவார்களா? இவர்களும் இவர்களின் அரசியல் கட்சிகளும் தமிழர்களுக்களித்த உறுதிகள் எதையாவது காப்பாற்றிய வரலாறு உண்டா? இப்போது இவர்களில் யாராவது தமிழர்களின் வாக்குகளைக் கவர்வதற்காக என்ன சொன்னாலும் அது வெறும் வாய்ப்பந்தலாகவே இருக்க முடியும்.

குறிப்பாக 2015 பொதுத் தேர்தலில் இதே இரணிலும் அவருக்கு முன் அதிபர் தேர்தலில் மைத்ரிபாலாவும் நீட்டி முழக்கிய வாக்குறுதிகள் கொஞ்சமா? சம்பந்தர் ஐயாவும் சுமந்திரனும் ஓநாய்-நரிக் கூட்டணியின் 'நல்லாட்சி'யை நம்பி அரசியல் தீர்வுக்கு நாள் குறித்ததை மறப்போமா?



**தோழர் தியாகு,**
பொதுச் செயலாளர், தமிழ்த் தேசிய விடுதலை இயக்கம்

இந்தப் பின்னணியில் – இனவழிப்புப் போருக்குப் பின் ஒவ்வொரு தேர்தலிலும் சிங்களத் தலைவர்கள் அளந்து விட்ட வாய்வீச்சுகளால் தமிழர்கள் வஞ்சிக்கப்பட்ட பின்னணியில் - சிங்களர்களால் சிங்களர்களுக்காக சிங்கள அரசமைப்பதற்கான இந்த இனநாயகத் தேர்தலில் தமிழர் எவரும் போட்டியிடாமல், வேட்பாளர் எவர்க்கும் வாக்களிக்காமல் புறக்கணித்து விட்டுப் போக வேண்டியதுதான் என்ற மனநிலைதான் இயல்பானது.

இப்போதும் கூட இனவழிப்புக்கு நீதியும், கட்டமைப்பியல் இனவழிப்புக்கு எதிரான பாதுகாப்பும், தமிழர் தேசத்தின் அடிப்படைக் குடியாட்சிய உரிமையாகிய தன்னுரிமைக்கு ஆதரவும் உண்மையில் வழங்கக் கூடிய ஒரு சிங்கள வேட்பாளர் இருப்பாரானால் அவரை ஆதரிக்கலாம் என்பேன். ஆனால் அப்படி யாரும் இல்லை என்பதே மறுக்க முடியாத உண்மை. சிங்கள பௌத்தப் பேரினவாதம் என்பது ஒரு வேட்பாளரையோ ஒரு கட்சியையோ நம்பி நிற்பதன்று, இறுதி நோக்கில் அது சிங்கள வெகுமக்களிடமே தங்கி நிற்பதாகும் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

இந்த நிலையில்தான் வரவிருக்கும் தேர்தலை இலங்கைத் தீவு வெறும் சிங்களர் நாடன்று, அங்கே தமிழர்கள் தனியொரு தேசம் என்பதை உலகுக்கு உணர்த்த, சிங்களர்க்கு நினைவூட்ட, தமிழர்க்கும் கூட உணர்வூட்ட இந்தத் தேர்தலை ஓர் உத்தியாகப் பயன்படுத்திக் கொண்டால் என்ன? என்ற எண்ணம் அறிவார்ந்த தமிழ்க்குடிகளிடையே முகிழ்த்தது. தமிழ்த் தேசியத்தை மறவாத அமைப்புகளும் தமிழ்க் குடிமைச் சமூகத்தவரும் புலம்பெயர் தமிழர் அமைப்புகளும் பொறுமையாக அலசி ஆராய்ந்து பொது வேட்பாளரை நிறுத்தும் முடிவை எடுத்துள்ளனர். இது தமிழ்க் குமுகத்தின் போராட்டத்துக்கு ஊக்கமளித்துள்ளது. பொருத்தமான பொது வேட்பாளராக அரியேந்திரன் களம் காண்கிறார். தமிழ் வாக்காளர்கள் யாவரும் அவருக்கே வாக்களித்து தமிழர் இருப்பை உலகத்துக்கு உணர்த்துவார்கள் என நம்புவோம்.

தேர்தல் என்பது வாக்குச் செலுத்துவது மட்டுமன்று. தேர்தல் பரப்புரை, தேர்தலுக்கான கதையாடல் முகன்மையானது. தமிழர் நீதிக் கோரிக்கையையும் தமிழ்த் தேசிய இனச் சிக்கலையும் மறக்கடித்து விட்டுப் பொருளியல் சிக்கலை, அதிலும் குறிப்பாக நிதிச் சிக்கலை மையச் சிக்கலாக்க சிங்களக் கட்சிகள் முயலும் போது, முதன்மைச் சிக்கல் தமிழர் நீதிக் கோரிக்கையே என்பதை நிலைநாட்ட வேண்டியது நம் பொது வேட்பாளரின் கடமை ஆகும். பார்க்கப் போனால் தமிழர்கள் மீது தொடுத்த இனவழிப்புப் போரும் அதனால் ஏற்பட்ட கொள்ளைச் செலவுமே சிறிலங்காவில் வெடித்த பொருளியல் நெருக்கடிக்கு அடிப்படைக் காரணம் என்பதை அனைவருக்கும் விளங்கச் செய்ய இது நல்ல வாய்ப்பு.



தமிழர்க்கு ஒரே தெரிவுதான். இரண்டாம் தெரிவு, மூன்றாம் தெரிவு எதுவுமில்லை. தமிழ்ப் பொது வேட்பாளர்க்கு வாக்களிப்பதோடு தமிழ் வாக்காளரின் வேலை முடிந்தது. எவ்வகையிலும் வேறு எந்த வேட்பாளருக்கும் எவ்வித மதிப்பும் அளிக்கத் தேவையில்லை. தமிழ்ப் பொது வேட்ப்பாளருக்கு வாக்களிப்பது தவிர தமிழர் நிலைப்பாடு சிங்களத் தேர்தலைப் புறக்கணிப்பதாகவே இருக்க வேண்டும்.

ஆனால், நம் பொது வேட்பாளர் தமிழ் மக்களிடம் மட்டும் வாக்குக் கேட்டால் போதும் என்று நினைக்கக் கூடாது. சிங்கத்தை அதன் குகையில் சந்திப்பது போல் சிங்கள வாக்காளர்களிடமும் அவர் ஆதரவு திரட்டத் தயங்கக் கூடாது. சிங்களர்களிடையே அமைதியையும் குடியாட்சியையும் அறத்தையும் நேசிக்கிற மக்கள் தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரிக்க வேண்டும்.


தமிழர் உரிமையே வரலாற்று நோக்கில் சிங்களர் உரிமைக்கும் வழி திறக்கும் என்பதே உண்மை.

• • •

# கூட்டாக கொல்லப்பட்டார்களா மேற்குலகத்தின் முக்கிய பிரமுகர்கள்?

ஆர்த்திகன்

இந்த பூமிபந்தில் உள்ள மிக முக்கிய செல்வந்தர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்களில் சிலரின் மரணம் சில தினங்கள் இடைவெளியில் இடம்பெற்றுள்ளது என்பது பிரித்தானியாவை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.



பிரித்தானியாவின் பில்கேட்ஸ் என அழைக்கப்படும் பிரித்தானியாவின் தொழில் நுட்பத்துறையின் மன்னரான மைக் லைன்ஞ் திங்கள்கிழமை(19) இரவு நிகழ்ந்த ஆடம்பர படகு விபத்தில் காணாமல்போயுள்ளார்.

பேய்சியன் எனப்படும் இந்த படகு அவருக்கு சொந்தமானது. அது இத்தாலிக்கும் சிசிலிக்கும் இடையிலான கடற்பகுதியில் ஏற்பட்ட புயல் காற்றை அடுத்து உருவாகிய நீரோட்டம் எனப்படும் சுழிக்குள் அகப்பட்டு திங்கள்கிழமை(19) காலை 5 மணியளவில் மூழ்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. அதில் இருந்த அவரின் 18 வயதான மகளும் காணாமல்போயுள்ளார். எனினும் மனைவி காப்பாற்றப்பட்டுள்ளார்.

இந்த சம்பவத்தில் உலகின் மிக முக்கிய முன்னனி வங்கியான மோர்கன் ஸ்ரன்லி எனப்படும் முதலீட்டு வங்கியின் தலைவர் ஜொனார்தன் புளுமரும் அவரின் மனைவியும் காணாமல் போயுள்ளனர்.

இந்த ஆடம்பரப் படகில் 12 பயணிகளும், 10 பணியாளர்கள் இருந்துள்ளனர். அதில் இருந்த 15 பேர் காப்பாற்றப்பட்டுள்ளனர். ஒருவர் மரணமடைந்துள்ளார், 6 பேர் காணாமல் போயுள்ளனர். லைன்ஞ்சின் மனைவி அங்கலா பகேரெசும் காப்பாற்றப்பட்டவர்களில் ஒருவர்.




ஓட்டோனொமி என்ற நிறுவனத்தின் நிறுவுனர் மைக் லைன்ஞ் அவர் தனது நிறுவனத்தை கெவ்லெற் பக்காட் நிறுவனத்திற்கு 2011 ஆம் ஆண்டு 11 பில்லியன் டொலர்களுக்கு விற்பனை செய்ததில் ஊழல்கள் இடம்பெற்றதாக அமெரிக்கா அவர் மீதும் அவரின் பங்காளி ஸ்ரீபன் சம்பர்லைன்(52) மீதும் 15 வழக்குகளை போட்டிருந்தது.

எனினும் அந்த வழக்குகளில் வாதாடி அவர்கள் கடந்த ஜுன் மாதம் வெற்றி பெற்றிருந்தனர். அந்த வெற்றியை கொண்டாடுவதற்கான விருந்து பசாரத்தையே ஆடம்பரப் படகில் லைன்ஞ் ஏற்பாடு செய்திருந்தார்.

ஆனால் அந்த விருந்தில் கலந்துகொள்வதற்கு முன்னரே கடந்த சனிக்கிழமை(17) கம்பர்லைன் கேம்பிறிச் பகுதியில் காலை 10 மணியளவில் வீதியில் உடல்பயிற்சிக்காக ஓடியபோது இனம்தெரியாத வொக்சல் கோர்சா வகை காரினால் மோதப்பட்டு மரணமடைந்துள்ளார்.



அதேசமயம், இந்த வழக்கில் வெற்றி பெறக் காரணமான உலகில் தலைசிறந்த வழக்கறிஞரான கிறிஸ்தோபர் மொர்விலோவும் அவரின் மனைவியும் இந்த படகு விபத்தில் காணாமல் போயுள்ளனர். அவரே லைன்சின் வழக்கறிஞராவார்.

இந்த விருந்துபசாரத்திற்கு அவர் அழைத்த தனது உறவினர்கள் நண்பர்கள் 10 பேரும் பிரித்தானியா, அமெரிக்கா மற்றும் கனடா நாடுகளைச் சேர்ந்த மிக முக்கிய புள்ளிகள். அதாவது இந்த பூமியில் மிகவும் சக்திவாய்ந்த மனிதர்கள். திடீரென தோன்றிய நீர் சுழற்சியில் அவர்கள் சிக்கியது தற்போதும் நம்பமுடியாது உள்ளதாக ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

கடலில் தோன்றிய நீர்ச்சுழற்சி அந்த சிறிய படகை மட்டும் தாக்கும் சாத்தியங்கள் எவ்வளவு? சரி அப்படித் தாக்கினாலும், அதில் இருந்த 22 22 பேரில் 15 பேர் காப்பாற்றப்பட்டுள்ளனர், அவர்களில் பெரும்பாலானவர்கள் சிப்பந்திகளும் சாதாரண மக்களுமே, ஆனால் மிக முக்கிய புள்ளிகள் அனைவரும் கூட்டாக காணாமல் போயுள்ளனர். அது எப்படி?




அங்கு காணாமல்போனவர்களில் வழக்கறிஞர் கிறிஸ் மொர்விலோ உலகில் மிகவும் பிரசித்தி பெற்றவர். கிளிபோட் சான்ஸ் என்ற உலகில் புகழ்பெற்ற சட்ட நிறுவனத்தின் தலைவர் அவர். 2001 ஆம் ஆண்டு அமெரிக்காவின் வர்த்தக மையத்தின் இரட்டைக் கோபுரம் மீதான தாக்குதல் தொடர்பான வழக்கையும் அவர் தான் கையாண்டிருந்தார்.

மிக சிக்கலான நிதி மோசடி வழக்குகளை கூட அவர் இலகுவாக வென்றுவிடுவார். அமெரிக்காவில் இடம்பெற்ற பல நிதி மோசடி வழக்குகளில் அவர் தான் வாதாடியிருந்தார்.

உயிர் தப்பிய அல்லது காப்பாற்றப்பட்ட 15 பேரில் ஒரு வயதுக் குழந்தையும் அடக்கம். ஆனால் ஒரு வயது குழந்தை தப்பியபோதும், கப்பலின் பணியாளர்கள் பலர் தப்பியபோதும் முக்கிய பிரமுகர்கள் அனைவரும் எவ்வாறு மரணித்தனர்? கடல்புயல் எவ்வாறு துல்லியமாக இந்த முக்கிய பிரமுகர்களை குறிவைத்து தாக்கி அழித்தது இந்த கேள்விகள் தற்போது அமெரிக்க, பிரித்தானிய மற்றும் கனடிய புலனாய்வுத்துறையினரை குழப்பத்தில் ஆழ்த்தியுள்ளது.

இதனை நாம் தற்செயலானது என நம்ப வேண்டுமா என மேற்குலக ஊடகம் ஒன்று கேள்வி எழுப்பியுள்ளது.




ஏனெனில் லைன்சின் பங்காளியான ஸ்ரீபன் இரண்டு தினங்களுக்கு முன்னர் வீதியில் வைத்து காரினால் மோதி கொல்லப்பட்டுள்ளார். அதன் பின்னர் பெரும் செல்வந்தரும், பிரித்தானியாவின் மிக முக்கிய பிரமுகருமான லைன்ஞ் அவரின் மகளுடன் தனது 18 மில்லியன் டொலர்கள்

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

## மேற்குலக ... தொடர்ச்சி ...

ஆயுதங்களை பயன்படுத்துவதற்கு அமெரிக்கா உட்பட பல மேற்குலக நாடுகள் அனுமதிகளையும் வழங்கியுள்ளன. ஆயுதங்களை அனுப்பி ரஸ்ய மக்களை அவர்களின் மண்ணில் வைத்து கொல்வது என்பது மிகப்பெரும் பேரழிவை ஏற்படுத்தும். இது மிகப்பெரும் போர் ஒன்றை எதிர்காலத்தில் ஏற்படுத்தும்.

நேட்டோவின் தலைவர் ஸ்ரேலன்பெர்க் மிகவும் ஆபத்தான மனிதர் ரஸ்யாவுக்குள் தாக்குதல் நடத்துவதற்கான அனுமதியை உக்ரைனுக்கு வழங்கியவர்களில் அவரும் ஒருவர் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## ஹசீனாவை ... தொடர்ச்சி ...

பதவியேற்றள்ளார்.

பங்களா தேசத்தில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டங்களில் முன்னைய அரசு மேற் கொண்ட தாக்குதல்களில் 400 இற்கு மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டுள்ளனர். அது தொடர்பான விசாரணைகளை புதிய அரசு மேற்கொண்டுள்ளது. எனவே இந்த படுகொலைகளக்கு உத்தரவிட்ட முன்னாள் பிரதமர் ஹசீனா குற்றவாளியாக இனங்காணப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஹசீனாவுக்கு இந்தியா அடைக்கலம் கொடுத்திருப்பது இரு நாட்டு உறவுகளையும் பாதிக்கும் எனவே அவரை நாடுகடத்தும் படி உத்தியோகபூர்வ கோரிக்கையை விடுப்பது தொடர்பில் எமது இடைக்கால அரசு முடிவெடுக்கும் என அதன் வெளிவிவகாரத்துறை ஆலோசகர் தோஹிட் குசைன் தெரிவித்தள்ளார்.

ஒரு குற்றவாளிக்கு இந்தியா அடைக்கலம் கொடுப்பது என்பது தன்னை ஜனநாயக நாடு என அழைக்கும் இந்தியாவின் கொள்கைகளுக்கு எதிரானது என பி.என்.பி கட்சியின் செயலாளர் இஸ்லாம் அலம்ஹீர் தெரிவித்தள்ளார்.

குற்றம் செய்தவர்களை நாடு கடத்தும் உடன்பாடு இரு நாடுகளுக்கும் இடையில் உள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். ஆனால் அது அரசியல்வாதிகளுக்கு பொருந்தாது என இந்திய ஊடகமான த ரைம்ஸ் ஒப் இந்தியா தெரிவித்துள்ளது.

பி.என்.பி கட்சி்யின் தலைவரும் முன்னாள் பிரதமருமான ஹலீடா சியாவை(79) ஹசினா அரசு ஊழல் குற்றச்சாட்டுக்களை முன்வைத்து 17 வருடங்கள் சிறையில் அடைத்திருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

## ஆபிரிக்க ... தொடர்ச்சி ...

அமைச்சர்கள் ஐ.நா பாதுகாப்புச் சபைக்கு கடந்த செவ்வாய்கிழமை(20) எழுதிய கடித்தில் தெரிவித்துள்ளனர்.

ஆபிரிக்க பிராந்தியத்தில் பணங்கரவாத நடவடிக்கைகளை ஊக்குவிப்பதற்கு உக்ரைன் முயன்று வருகின்றது. அனைத்துலக சட்டவிதிகளின் பிரகாரம் இது மிகவும் மோசமான நடவடிக்கை. இது ஆபிரிக்க பிராந்தியத்தின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலானது. வெளிநாடு ஒன்று எமது பிராந்தியத்தின் அமைதியை சீர்குலைக்க முற்படுவதை ஐ.நா தடுக்க வேண்டும் என்பதுடன் உக்ரைன் மீது நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என அந்த கடித்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தாக்குதலை தமது புலனாய்வுத்துறையினர் மேற்கொண்டதாகவும், மேலும் தாக்குதல்கள் நடைபெறும் எனவும் உக்ரைன் அதிகாரிகள் இந்த தாக்குதல் குறித்து கருத்து வெளியிட்டிருந்தது, மேற்கு ஆபிரிக்க நாடுகளுக்கும் உக்ரைனுக்குமிடையிலான முறுகல் நிலையை அதிகரித்துள்ளது.

## இனவாதிகளுக்கு ... தொடர்ச்சி ...

13 வது திருத்தம் குறித்து பல இடங்களில் பேசி இருக்கின்றார். எனவே அரசியல்வாதிகள் 13 வது திருத்தம் பற்றியே பேசிக் கொண்டிருக்கின்றனர். நான் 13 வேண்டாம் என்று ஏற்கனவே எதிர்த்திருக்கின்றேன். தமிழ்தரப்பில் பொது வேட்பாளர் ஒருவர் களமிறக்கப்பட்டிருக்கின்றார். இது குறித்து சிந்திக்க வேண்டியுள்ளது. 2010 ம் ஆண்டு பொது வேட்பாளர் களமிறக்கப்பட்டிருந்தால் அமோக வரவேற்பு கிடைத்திருக்கும் என்பதே உண்மையாகும்.

நாம் யுத்தத்தினால் பல இழப்புகளை சந்தித்தோம். ஆனால் நாம் எமது அரசியலை இழக்காமல் இருக்கின்றோம். வடகிழக்கில் இப்போது புல்லுருவிகள் அதிகமாக இருக்கின்றார்கள். தெற்கின் அரசிய லோடு கைகோர்த்து பயணிக்கின்ற ஒரு போக்கும் காணப்படுகின்றது அத்தோடு இந்தியாவுக்கு சாமரம் வீசும் அரசியல்வாதிகளும் இங்கிருக்கின்றார்கள். அடுத்த பொதுத் தேர்தலுக்கு தம்மை தயார்படுத்திக்கொள்ளும் ஒரு முன்னோடி நடவடிக்கையே இதுவாகும். வடகிழக்கில் இனவாதிகளுக்கு நேரடியாக வாக்களிக்கும் நிலைமையும் இருந்து வருகின்றது. இச்செயலானது வடகிழக்கு எங்கள் தாயகம் என்பதை மறுதலிப்பதாக உள்ளது. வடகிழக்கு மக்களும், அரசியல்வாதிகளும் பேரினவாத கைக்கூலிகளுக்கு பின்னால் நிற்கக்கூடாது. இலவசங்களுக்கும், அற்ப சலுகைகளுக்கும் விலைபோகக் கூடாது.

நாங்கள் யாருக்கு வாக்களித்தும் பயனில்லை என்ற நிலைப்பாட்டில் தமிழீழ விடுதலைப்புலிகள் இருந்தார்கள். இந்த நிலைப்பாடு தொடர்பிலும் நாம் விசேட கவனம் செலுத்த வேண்டியுள்ளது. நாம் எமது அரசியல் இருப்பையும் , கனவையும் சாததியப்படுத்திக் கொள்ள அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் என்றும் அருட்தந்தை சக்திவேல் தெரிவித்தார்.

## தேசிய தேர்தல் ... தொடர்ச்சி ...

செய்திருக்கின்றார். அதாவது தேர்தலில் செல்வாக்கைச் செலுத்தக்கூடிய நியமனங்களாகவே இவை உள்ளன.

இந்தச் செயற்பாடுகள் அனைத்துமே தேர்தல் சட்டங்களை மீறுபவைதான். ஆனால், அவற்றைத் தடுத்து நிறுத்தவோ தட்டிக்கேட்கவோ முடியாத நிலையில் தேர்தல்கள் ஆணைக்குழு இருப்பது சுயாதீனமான தேர்தலை உறுதிப்படுத்த முடியாத நிலையில் ஆணைக்குழு இருக்கின்றது என்பதைத்தான் உறுதிப்படுத்துவதாக இருக்கின்றது.

• • •

## சுமந்திரன், ... தொடர்ச்சி ...

இருக்கிறார்கள்.

கிளிநொச்சியைச் சேர்ந்த சிறீதரனும் பொது வேட்பாளரை வாழ்த்தியிருக்கிறார். ஏற்கனவே அதற்கான கூட்டங்களும் கிளிநொச்சியில் கூடப்பட்டிருக்கிறது.

அதேபோல தலைவராக இருக்கின்ற சேனாதிராஜாவும் இதனை வரவேற்றிருக்கின்றார். ஆகவே தமிழரசுக் கட்சியினுடைய பெரும்பான்மையானோர் இதனை ஆதரித்து வரவேற்றிருக்கிறார்கள்.

ஒரு சிலர் தங்களுடைய சொந்தக் காரணங்களுக்காக இவ் வாறு எதிர்க்கின்றனர்.

தமிழ்ப் பொது வேட் பாளருக்கு எதிராக முடிவு எடுப் பார்களாக இருந்தால் அது தமிழ்த் தேசியத்துக்கு எதிரான முடிவாகத் தான் இருக்கும். தமிழ் மக்களுடைய பிரச்சினைகளை தீர்க்காமல் நாட் டின் பொருளாதாரப் பிரச்சினையைத் தீர்க்க முடியாது என்பதை விளக்கும் வகையிலும் ஒட்டு மொத்த தமிழ் மக்களும் வாக்களிப்பதன் ஊடாகவே தென்னிலங் கையின் வேட்பாளர்களுக்குத் தெளிவுபடுத்த முடியும்.

எங்களுக்கு இருக்கக் கூடிய ஜனநாயக தளம் என்பது இந்த ஜனாதிபதி தேர்தேலேயாகும். அந்த களத்தை பாவித்து ஒட்டுமொத்த வடக்கு கிழக்கு தமிழர்களும் இணைந்து இந்த செய்தியை சொல்ல விரும்புகின்றோம்'' என்றார்.

## இந்திய கடற் ... தொடர்ச்சி ...

நடவடிக்கைகள் குறித்து ஆராய்ந்ததாகவும், இரு கடற் படையினரும் இணைந்து செயற் படுவது தொடர்பிலும் இந்த சந்திப் பில் பேசப்பட்டதாக இந்திய ஊடகங்கள் கடந்த செவ்வாய் கிழமை(20) தெரிவித்துள் ளன.

இந்தியாவின் பாதுகாப்பு ஆயுத விநியோகம் பெருமளவான ஆயுதங்கள் ரஸ்யாவிடம் இருந்து தான் கொள்வனவு செய்யப்படுகின்றது. இந்த நிலையில் இந்திய கடற்படையின் பலத்தை இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் அதிகரிக்கும் நோக்கத்துடன் இரண்டு பிரிகேற் வகை கடற்படைக் கப்பல்களை இந்தியாவுக்கு வழங்குவதற்கு ரஸ்யா திட்டமிட்டுள்ளது. முதலாவது கப்பல் அடுத்த மாதமும் மற்றுமொரு கப்பல் எதிர்வரும் வருடத்தின் முற்பகுதியிலும் வழங்கப்படவள்ளன. மேலும் இரண்டு கப்பல்களை இரு நாடுகளும் இணைந்து கட்டவுள்ளன.

அதேசமயம் இந்தியாவினால் 5.43 பில்லியன் டொலர்கள் செலவில் கொள்வனவு செய்யப்பட்ட நான்கு எஸ்-400 வான்பாதுகாப்பு ஏவுகணைத் தொகுதிகளில் இரண்டு மிக விரைவில் இந்தியாவுக்கு வழங்கப்படவுள்ளதாக ரஸ்யா தெரிவித்துள்ளது. ஏற்கனவே இரண்டு இந்தியாவுக்கு வழங்கப்பட்டுள்ளது.



## காழ்ப்புணர்ச்சி ... தொடர்ச்சி ...

எவ்வாறெனினும் 1700 ரூபா சம்பள உயர்வு என்பது ஒரு கானல் நீராக இருந்து வந்த நிலையில் எதிர் தரப்பினரும் பல்வேறு வாத பிரதிவாதங்களை முன்வைத்திருந்தனர். இதனிடையே பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாட்சம்பளமாக 1700 ரூபாவை வழங்குவதற்கான தீர்மானம் சம்பள நிர்ணய சபையில் நிறைவேற்றப்பட்டுள்ளது. தொழில் ஆணையாளர் எச்.கே.கே.ஜயசுந்தர தலைமையில் நாரஹேன்பிட்டியிலுள்ள தொழில் திணைக்களத்தில் கடந்த திங்கட்கிழமை (12) கூடியபோதே இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதற்கமைய 1350 ரூபா அடிப்படை சம்பளம், 350 ரூபா உற்பத்தித்திறன் கொடுப்பனவையும் வழங்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டது. இந்த தீர்மானத்துக்கு ஆதரவாக 09 பேர் வாக்களித்திருந்தனர். இதேவேளை 1700 ரூபா சம்பளத்தை வழங்குவதாயின் தம்மால் முன்வைக்கப்படும் நான்கு நிபந்தனைகளையும் ஏற்றுக்கொள்ளுமாறு முதலாளிமார் சம்மேளனம் வலியுறுத்தி இருந்தது. அவற்றில் முதலாவது தேயிலை, இறப்பர் உற்பத்தி மற்றும் உற்பத்தி தொழில்களில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கு நாள் சம்பளமாக 3 வருடங்களுக்கு 1350 ரூபாவை வழங்க வேண்டும். இந்தத் தொகைக்கு மாத்திரமே ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதி உள்ளிட்டவை வழங்கப்படும். தொழிலாளர்களுக்கு ஒவ்வொரு மேலதிக கிலோவுக்கும் 50 ரூபா வழங்கப்பட வேண்டும். ஒரு தொழிலாளிக்கு அவர் நாள்தோறும் பறிக்கும் கிலோவுக்கு மேல் ஊதியம் வழங்கப்படும் தொகை வரையறுக்கப்படவில்லை. அது பறிக்கப்பட்ட கிலோவுக்கு மேல் 350 ரூபாவுக்கு அதிகமாகவும் இருக்கலாம். தொழிலாளர்கள் மூன்று வருடங்கள் முடிவடைவதற்கு முன் எந்த விதத்திலும் ஆர்ப்பாட்டங்களை முன்னெடுக்கவோ மீண்டும் சம்பள உயர்வைக் நோர்வே முடியாது போன்ற நிபந்தனைகளை சம்மேளனம் முன்வைத்தது. எனினும் அவர்கள் முன்வைத்த யோசனைகளை ஏற்க முடியாதென 07 தொழிற்சங்கங்கள் ஏகமனதாக தீர்மானித்தன.

### 70 வீத அதிகரிப்பு

பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு 1350 ரூபா அடிப்படை சம்பளம் என்பதே ஒரு வெற்றியாகும். இதனூடாக மாதத்தில் 20 நாட்கள் அவர்கள் வேலை செய்தால் 7000 ரூபா கடந்த காலத்தைக் காட்டிலும் அவர்களுக்கு மேலதிகமாகக் கிடைக்கின்றது. வேலை நாட்கள் அதிகரிக்கப்படுகையில் இத்தொகையில் மேலும் அதிகரிப்பு ஏற்படும். இது சாதக விளைவேயாகும் என்ற ரீதியில் இது குறித்து நாம் ஆழமாக சிந்திக்க வேண்டும். முன்னாள் பிரதியமைச்சர் வி.புத்திரசிகாமணி இச்சம்பள உயர்வு தொடர்பில் மேலும் பல விடயங்களையும் சுட்டிக்காட்டுகின்றார்.

1700 ரூபா சம்பள உயர்வு கோரிக்கை சாத்தியமாகியுள்ளது. இது 70 வீத சம்பள அதிகரிப்பாகும். இதனடிப்படையில் ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதி என்பன உள்ளடங்கலாக நாட்சம்பளமாக தொழிலாளியொருவருக்கு 1904 ரூபா கிடைக்கப்பெறுகிறது. அத்தோடு சேவை காலப் பணத்திலும் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. இதற்கேற்ப சேவைகாலப் பணமானது 90 ரூபாவில் இருந்து 1320 ரூபாவாக உயர்வடைந்துள்ளது என்று புத்திரசிகாமணி கூறியுள்ள நிலையில் ஜனாதிபதி மற்றும் அமைச்சர் ஜீவன் ஆகியோருக்கு தனது நன்றியையும் தெரிவித்துக் கொண்டுள்ளார்.

இதேவேளை ஜே.வி.பி.யின் அகில இலங்கை தோட்டத் தொழிலாளர் சங்கம், இலங்கை செங்கொடிச் சங்கம் உட்பட 3 தொழிற்சங்கங்கள்1700ரூபாஅடிப்படைசம்பளம் வழங்கப்பட வேண்டும் என்ற யோசனையை முன்வைத்திருந்தன. எவ்வாறெனினும் சமகால அடிப்படைசம்பளஅதிகரிப்பின்அடிப்படையில் தொழிலாளியொருவர் மாதாந்தம் குறைந்தபட்சம் 7000 ரூபாவை பெற்றுக் கொள்ள முடிந்துள்ளமை வரவேற்கத்தக்க ஒரு விடயமேயாகும். இதனால் மேலும் பல நன்மைகளுக்கும் அடித்தளமிடப்பட்டுள்ளது. இந்நிலையில் வீண் விதண்டாவாதங்களால் கிடைக்கக் கூடிய நிலையிலுள்ள இச்சம்பள உயர்வை மழுங்கடிக்கும் செயற்பாடுகளில் யாரும் ஈடுபடுதல் கூடாது. இதேவேளை காழ்ப்புணர்ச்சியை மையப்படுத்தி தொழிலாளர்களை உசுப்பேத்தி அவர்களை பிழையான வழிகளில் திசைதிருப்ப எவரும் முனைதல் கூடாது. இத்தகைய முரண்பாடான செயற்பாடுகளால் தொழிலாளர்களின் வறுமை நிலை மேலோங்குவதற்கு நாமே உடந்தையாகிவிடு வோம் என்பதோடு 'நமக்கு நாமே குழி பறித்தவர்கள்' என்ற பழிச் சொல்லுக்கும் ஆளாகிவிடுவோம்.

• • •

## பண்பாட்டு விழு ... தொடர்ச்சி ...

அவரோடு தொங்கும் மான்களுக்கு நாம் சொல்லிக்கொள்வது ஒன்றே ஒன்று தான், மக்கள் ஆணையோடு எம் மண்ணின் பிரச்சினைகளை பார்ப்பதே முறையானது. அதிகாரத்தின் கால் பிடித்து பின் வாசல் பதவிகள் மூலம் செய்யப்படும் தலையீடுகளை நீங்கள் உடனடியாக நிறுத்திக்கொள்ளுங்கள்.நிர்வாக சபை பிரச்சினைக்கு ஒரு பொழுதும் அரச முகவரிடம் தீர்வை பெற முடியாது''என கருத்துகள் முன்வைக்கப்படுகின்றன.

இது தொடர்பில் திருகோணமலையினை தளமாக கொண்டு செயற்படும் சிவில் சமூக செயற்பாட்டாளரான க.லவகுகராசா கருத்து தெரிவிக்கையில், தமிழர்களின் அடையாளமாக திருகோணேச்சரம் உள்ளது.இன்று பௌத்தமயமாக்கல் அதிகரித்துவரும் நிலையில் திருக்கோணேச்சரம் தமிழர்களின் வரலாற்றினை வெளிப்படுத்தும் ஆலயமாகவுள்ளது.இதே போன்று தமிழர்களின் அடையாளமாகயிருந்த கன்னியா வெந்நீருற்று பகுதியும் முற்றுமுழுதாக பௌத்தமயமாக்கல் செய்யப்பட்டுள்ளது.திட்டமிட்ட வகையில் இந்த பௌத்தமயமாக்கல் முன்னெடுக்கப்பட்டுவருகின்றது.

இதேபோன்றுதான் திருக்கோணேஸ்வரம் ஆலய பகுதியில் சிங்கள மக்களை பௌத்த பிக்கு ஒருவரே திட்டமிட்டு கொண்டுசென்றுவிட்டு கடைகளை அமைத்து ஆக்கிரமிப்புகளை மேற்கொண்டனர்.இது தொடர்பில் பல்வேறு வகையான சட்ட நடவடிக்கைகளை முன்னெடுத்தபோதிலும் இதுவரையில் அவர்களுக்கு எதிரான எந்த நடவடிக்கையும் முன்னெடுக்கப்படாத நிலையில் அங்கு நிரந்தரமாக்கப்பட்டுவருகின்றனர்.

இன்று கதிர்காமம் ஆலயம் சிங்களமயப்படுத்தப்பட்டு தமிழர்களின் அடையாளம் முற்றாக அழிக்கப்பட்டுள்ளது.அதேபோன்று கோணேஸ்வரர் ஆலயத்தினையும் சிங்கள பௌத்தமயமாக்கலுக்குள் கொண்டுவர முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றதா என்ற சந்தே கம் இருக்கின்றது.இவ்வாறான நிலையில் அரசாங்கத்தின் இந்த பௌத்தமயமாக்கல் செயற்பாடுகளுக்கு இந்த ஆலய நிர்வாகம் தடையாகயிருக்கின்றது.அதற்காக கிழக்கு மாகாண ஆளுனரை அரசாங்கம் பயன்படுத்துகின்றதா என்ற சந்தேகம் எழுந்துள்ளது. குறிப்பாக சோளர் காலத்து நகை களவாடப்பட்டுள்ளது என்ற கருத்தினை கொண்டுவந்து தற்போதுள்ள ஆலய நிர்வாகத்திற்கு எதிரானகருத்துருவாக்கங்களைசெய்து ஆலயத்தின் செயற்பாடுகளை அரசாங்கம் கையகப்படுத்தும் முயற்சியாக இது இருக்காலாம்.மக்கள் மத்தியில் தவறான தகவல்களை பரப்பி ஆலயத்தின் செயற்பாடுகளை அரசாங்கம் முழுமையாக கையகப்படுத்தும் சந்தர்ப்பத்தில் ஆலயத்தில் முன்னெடுக்கப்படும் விடயங்களை நிர்வாகமும் ஏனையவர்களும் தட்டிக்கேட்கமுடியாத நிலைமை ஏற்படும்.நிர்வாகத்தினை அரசு பொறுப்பேற்கும் நிலைமைகள் உருவாகும்போது இவை நடைபெறுவதற்கான நிலைமைகள் ஏற்படலாம் என்பதையும் நாங்கள் பார்க்கலாம்.எமது இன அழிப்பின் ஒரு பகுதியாகவே இதனை நாங்கள் பார்க்கின்றோம்.

இது தொடர்பில் ஆலய நிர்வாகத்தின் தலைவர் துஜியந்தன் கருத்து தெரிவிக்கையில், கோவிலில். வசந்த மண்டபத்தில் 31-2 பவுண் பெறுமதியான நகை ஒன்று காணாமல் போய் விட்டது. அது தொடர்பில் நிர்வாகம் கடமையில் இருந்த நான்கு பேரிடமும் சட்டநடவெடிக்கையை எடுக்க் வேண்டிவரும் என்பதையும் அதானல் எற்படகூடிய சாதக பாதகங்களியும் எடுத்து கூறியதை அடுத்து அந்த நான்கு பேரும் அந்த பேரும் காணமல் போன அந்த நகையை அதே பெறுமதியில் செய்வித்து நான்கு நாட்களுக்குள் ஒப்படைப்பதாக பொறுப்பேற்று கொண்டதோடு பிரச்சணை முடிவுக்கு கொண்டுவரப்பட்டது .

அதுவே யாப்பிலும் இருக்கும் விதி முறை ஆகும். இது இப்படி இருக்க கிழக்கு மாகாண ஆளுனர் அலுவலகத்தில் இருந்து ராஜ ராஜ சோழகாலத்து நகை என்றும் அது பலகோடி பெறுமதியானது என்ற மாதிரி ஊடகங்களுக்கு செய்தி அனுப்பியதும் மேலும் பொறுப்பற்ற விதத்தில் உண்மைக்கு புறம்பான செயற்பாட்டுக்கான காரணம் கோணேஸ்வரர் கோவிலில் ஓர் பதவி நிலையை அடைவதற்க்கான அவரின் முயற்ச்சிகள் வெற்றி பெறாமல் போனதால் இவ்வாறு பிரச்சனைகளை உருவாக்கி மக்களை உணர்ச்சி வசப்படுத்தி பிழையாக வழிநடத்தியத்து கோணேசர் கோவிலுக்கு இந்திய அரசு கோபுரம் கட்டுவதற்க்கு பல கோடிகள் வழங்க இருப்பதாக கூறப்படுகிறதும் அதணை பெற்றுக் கொடுக்ககூடியவராக ஆளுனர் இருப்பதும் சிலபேருக்கு நப்பாசைகளை உருவாக்கும். அதணை பயன்படுத்தி வடக்கு, கிழக்கை தமது முழுக்கட்டுபாட்டில் கொண்டு வரும் முயற்ச்சியாகவே நாம் பார்க்கிறோம் என்றார்.

• • •

## கூட்டாக கொல்ல ... தொடர்ச்சி ...

பெறுமதியான ஆடம்பரப் படகுடன் காணாமல் போயுள்ளார்.

படகு மூழ்கியதா இல்லை மூழ்கடிக்கப் பட்டதா? உலகின் மிக முக்கிய வங்கியான மேர்கன் ஸ்ரன்லியின் தலைவரும் அவரின் மனைவியுடன் காணாமல் போயுள்ளார்.

ஈரான் அதிபர் இப்ராஹிம் ரிசி மற்றும் வெளிவிவகார அமைச்சர் உட்பட ஆறுபேர் பயணம் செய்த பெல்-212 உலங்கு வானூர்தி திடீரேனெ வீழ்ந்து நொருங்கியது போன்ற ஒரு சம்பவமாக தான் இந்த சம்பவமும் உள்ளது.

ஆனால் அன்று ஈரான் இழந்ததைவிட தற்போதைய இழப்பு மேற்குலகத்திற்கு மிகவும் அதிகமானதும் ஆபத்தானதும். பல மர்மங்கள் நிகழ்கின்றன, மேலும் பல நிகழலாம், நாம் ஒரு இனம்புரியாத நிழல்போருக்குள் மெல்ல மெல்ல உள்வாங்கப்படுகின்றோம் என்பது மட்டும் தெளிவானது.

• • •

இலக்கில் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியவர்களே பொறுப்பு.
அவற்றில் உள்ள கருத்துக்கள் இலக்கின் கருத்துக்களாக பார்க்கப்பட வேண்டுமென்பதில்லை.

# முள்ளிவாய்க்காலில் தேசமாக மீண்டெழும்

# சனநாயக விடுதலை தீபம்

